REGISTERED AS A CATHOLIC WEEKLY. (P.197) Established 19 Feb. 1876

# பாதுகாவலன்

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வாரஏடு

PATHUKAVALAN

மலர் 124
இதழ் 14
15 புரட்டாசி 1999
விலை ரூபா 5

# அரசியல்வாதிகள் எமது நாட்டின் இனப்பிரச்சனையை தீர்ப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை

~மன்னார் ஆயர் பேரருட்திரு இராயப்பு யோசவ்



அண்மையில் அவுஸ்ரேலியா, நியூசிலாந்து நாடுகளுக்கு விஜயத்தை மேற்கொண்ட மன்னார் ஆயர், அந்நாட்டுப் பிரமுகர்கள் மத்தியில் மேற்கண்டவாறு தெரிவித்தார். எமது நாட்டில் நடந்துகொண்டிருக்கும் யுத்தத்தை நிறுத்தி, பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இரு தரப்பையும் இணங்கச் செய்து சமாதானத்தை ஏற்படுத்த இருநாடுகளும் உதவவேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

மேற்குறிப்பிட்ட நாடுகளிலுள்ள அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், அரசுசார் அமைப்புக்கள், திருச்சபை ஆயர்கள், பத்திரிகையாளர் போன்ற பலதரப்பினரையும் சந்தித்து இலங்கையின் உண்மை நிலையினை விளக்கினார். போரின் நெருக்கடி, அநியாய உயிர்ப்பலி, மனித உரிமை மீறல்கள், தொடரும் இடம்பெயர்வுகள் பற்றி எடுத்துரைத்து, இதற்கு ஒரு முடிவுகாண அவர்களின் உதவியைக் கோரினார்.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

மறைக்கல்வித் தினத்தையொட்டி இயக்குனருடன் பேட்டி

## பெற்றோர் மறைஅறிவில் அக்கறை எடுக்கவேண்டும்

~யாழ். மறைக்கல்வி நிலைய இயக்குனர் நேசராஜா அடிகள்

தேசிய மறைக்கல்வித் தினத்தையொட்டி (செப். 26) யாழ். மறைக்கல்வி நிலைய இயக்குனருடன் நிலையப் பணிகள்பற்றி செவ்வி கண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கும்பொது "பெற்றோர்தான் எல்லோரையும் இயக்கவேண்டியவர்கள். அவர்களே தமது கருத்துக்களையும், கவனிப்புக்களையும் பங்குத்தந்தைக்கு அறிவித்தும், எம் நிலையத்தோடு தொடர்புகொண்டும் தமது பிள்ளைகளின் மறையறிவில் அக்கறை எடுக்கவேண்டும்" என்று தெரிவித்தார். பேட்டியின் முழுமையான விவரத்தை இரண்டாம் பக்கத்தில் காணலாம்

## கத்தோலிக்க பாட ஆசிரியர்களை நியமிப்பதென அரசு எடுத்த தீர்மானம் அமுல்படுத்தப்பட வேண்டும்

கத்தோலிக்க பாட ஆசிரியர்களை நியமிப்பதென அரசு எடுத்த தீர்மானம் அளவு மீறிய தாமதமின்றி அமுல்படுத்தப்பட வேண்டும் என, கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில கத்தோலிக்க செய்திப் பத்திரிகையான மெசென்ஜர் 15ஆவணி 99 இதழில் ஆசிரிய தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

மேற்படி ஆசிரிய தலையங்கத்தின் முழுமையையும் இரண்டாம் பக்கத்தில் காணலாம்.

சர்வகலாசாலையில் சர்வமத பிரார்த்தனை

## சமாதானத்திற்கு வழிவகுக்கும்

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டு ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் தொடர்ச்சியாக 5 மணிமுதல் 6 மணிவரை சர்வசமய பிரார்த்தனை நடைபெற்றுவருகிறது. இந்துசமய, கிறிஸ்தவ, கத்தோலிக்க மாணவர்கள் இணைந்து வழிபாடுகளை ஒழுங்குபடுத்தி வருகின்றனர். வன்னி, முல்லை மாணவர் ஒன்றியங்களினால் பாதை திறப்பதற்காக நடத்தப்பட்ட சர்வமத பிரார்த்தனையைத் தொடர்ந்து தமிழ் மக்களுக்கு உண்மையான, சுபீட்சமான முடிவு கிட்டும்வரை சாத்வீக போராட்டத்தின் ஒரு துணையாக செபவழிபாடு நடாத்தப்பட்டு வருகிறது. இறைவனை நோக்கி எழுப்பப்படும் வேண்டுதல்கள் வாளைவிடக் கூர்மையானது. இன்று பல்கலைக்கழக மாணவர்கள் சர்வமத ஒருமைப்பாட்டில் ஈடுபடுவதன் மூலமாக இன்னும் ஒரு புதிய திருப்புமுனையாக வன்முறையான தீர்வை முழுமையாக ஆதரிக்காமல், இந்த அகிம்சை வழியான பிரார்த்தனையானது மக்கள் மத்தியில் விழிப்புணர்வையும் ஒன்றிப்பையும் ஏற்படுத்த தூண்டுகோலாய் உள்ளது. பல்கலைக்கழக மாணவர்கள் முன்னெடுத்த இம்முயற்சியானது தமிழ் மக்களின் முழு விடுதலைக்கு வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை. இந்த முயற்சிக்கு தென் இலங்கை சிங்கள சகோதரரும் ஒத்துழைப்பு நல்குவது குறிப்பிடத்தக்கதாகும்.

பி. டிலாந்தினி

## அன்புத் தாயார் அன்னை திரேசா

வல்ல் பரன் அரவணைப்பில் வாழ்க வாழ்க



அன்னை தெரேசாவின் இரண்டாம் ஆண்டு நினைவையொட்டி பாதுகாவலன் மூத்த எழுத்தாளர் யாழ். ஜெயம் எழுதிய கவிதை பிரசுரமாகிறது. கவிதையின் முழுமையினை 8ம் பக்கத்திற் காணலாம்.

தீயினிலே எரிகின்ற பஞ்சை நூற்றுத்
திரள்திரளாய்ப் பட்டாடை நெய்த தெய்வத்
தாய்முகத்தை ஈராண்டு காணா திங்கே
தவித்தோடித் தேடியலை கின்றோம் அம்மா
தூயவரும் தீயவரும் உயர்வு தாழ்வுத்
துறைபடிந்த யாவருமே ஒன்று கூடி
வாயார மனமார வாழ்த்திப் போற்ற
வல்லபரன் அரவணைப்பில் வாழ்க வாழ்க

## உதயன் பத்திரிகை மீதான தாக்குதலுக்கு பாதுகாவலன் கண்டனம்

உதயன் பத்திரிகைக் காரியாலயத்தின் மீது நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலை ஜனநாயகத்திற்கு எதிரான செயலென பாதுகாவலன் கண்டிக்கிறது

யாழ் நகரில் ஒரேயொரு செய்திப்பத்திரிகையாக இக்கட்டான காலகட்டத்தில் மக்களின் தேவையறிந்து பணிபுரிந்து, 1998ம் ஆண்டின் துணிச்சலான பத்திரிகைக்குரிய தேசிய விருதினைப் பெற்றுக்கொண்ட உதயனின் பணிக்கு இடையூறு ஏற்படுத்துவது தமிழ் மக்களின் ஏகோபித்த குரலையே மழுங்கச் செய்வதாகும்.

மேற்படி சம்பவத்தால் உதயன் பத்திரிகைக்கும் பணியாளர்களுக்கும் ஏற்பட்டுள்ள வேதனையில், மனித மாண்பையும், சமயப்பற்றையும் இறுகப் பற்றியிருக்கும் பாதுகாவலனும் பங்குகொள்கிறது.

பத்திரிகைத்துறையின் மகத்துவத்தையும், மாண்பையும் ஜனநாயக வழியில் பேணிப்பாதுகாக்க பாதுகாவலன் அனைவருக்கும் அன்பு அழைப்பு விடுக்கிறது. (ஆ-ர்)

## பாதுகாவலன் பணிமனையில் அஞ்சலி

## நிருபர்கள் அமைதி இல்லத்திற்கு விஜயம்

### அன்னை திரேசாவின் இரண்டாம் வருட நினைவு

உலகின் வெள்ளை றோஜாவாக நறுமணம் வீசும் அன்னை திரேசாவின் மறைவின் இரண்டாம் ஆண்டு நிறைவு நாளாகிய 05.09.99 அன்று காலை பாதுகாவலன் பணிமனையில் அன்னையின் வாழ்வுப்பணி மூலம் இறைவன் செய்த நன்மைத்தனங்களை எண்ணி நன்றிகூறும் அஞ்சலி நிகழ்வொன்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் பாதுகாவலன் ஆசிரியர் அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை தலைமையில் ஏறக்குறைய 25 பாதுகாவலன் நிருபர்கள் பங்குபற்றினர்.

இதேவேளை அன்னை திரேசா அமைதி இல்லத்தில் காலை 9.30 மணிக்கு குருமுதல்வர் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. பாதுகாவலன் பணிமனையில் இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வில்,

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## 'புதிய உலகம்' கத்தோலிக்க வானொலி நிகழ்ச்சியின் 1000வது மலர்

புதிய உலகம் படைக்க புறப்பட்டு வருக

'புதிய உலகம்' கத்தோலிக்க வானொலி நிகழ்ச்சியின் 1000வது மலர் செப்ரெம்பர் 17ம் திகதியன்று ஒலிபரப்பாகவிருக்கின்றது. இவ்வாண்டு 'புதிய உலகம்' நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டு 25 வருடங்கள் நிறைவாகின்றன. 1975ம் ஆண்டில் கரவையூர்ச் செல்வம் என அழைக்கப்படும் எஸ். எம். செல்வரட்ணம் அடிகளாரால் இந்தப் 'புதிய உலகம்' வானொலி நிகழ்ச்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந் நிகழ்ச்சிகள் ஒன்றுவிட்ட ஒரு ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 7 மணிக்கு ஒலிபரப்பாகிறது. தவக்காலம், கிறிஸ்து பிறப்புக் காலம் போன்றவற்றில் சிறப்பு [illegible] 30 நிமிட நிகழ்ச்சியில் 15 நிமிடங்கள் மறைமாவட்ட அளவில் [illegible] மிகுதி 15 நிமிடங்கள் நிலையத்தால் தொகுத்தளிக்கப்படுகின்றது. 1970களில் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையினால் ஒலிப்பதிவுக் கலையகம் உள்ளிட்ட சமூகத்தொடர்பு நிலையமொன்று நிறுவப்பட்டது.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் கருத்து

### மறைக்கல்வியின் மகத்துவம்

கல்வி என்பது பலதரப்பட்ட அறிவை ஒருவர்மனதில் திணிப்பதல்ல. அது ஒருவரை உருவாக்குவதாகும். ஒரு குழந்தை தான் வாழும் சமூகத்தில் தனது அழைப்பையுணர்ந்து, அதனை ஏற்று செயலாற்றுவதற்கு வேண்டியதகுதியை அடைவதற்கு அறிவிலும், ஒழுக்கத்திலும் வளர்ச்சிபெற்று வாழ்க்கைக்கு அடித்தளமிடுவதாகும். அது ஈற்றில் அவனது ஆன்மீக நிறைவுக்கு இட்டுச் செல்ல வேண்டும். இதற்கு அடிப்படையாயுள்ளது மறைக்கல்வி. சில மறையுண்மைகளைக் கற்றுக் கொள்வது மட்டும் மறைக் கல்வியாகாது. இறைவனைப் பற்றிய உண்மைகளை, சமயக் கோட்பாடுகளை கற்றுக்கொள்வது அவசியமே. ஆனால் அந்தஅறிவு, ஒழுக்க ஆன்மீக மதிப்பீடுகளைப்பெற்று சரியான நடத்தைகளைக் கடைப்பிடிக்க வழிசெய்யவேண்டும். உண்மை பேசவும், பிறருக்கு அன்புகாட்டவும், பொருள்களை தக்கபடி பயன்படுத்தவும், சூழலைப் பேணவும், தங்களைப் புனிதமாகப் பேணவும் இவை யாவற்றினாலும் தம்மைப் படைத்த இறைவனது திட்டத்தை நிறைவேற்றவும் இக்கல்வி உந்து சக்தியாக இருக்க வேண்டும்.

ஆனால் அண்மைக் காலங்களில் உலகியல்சார்ந்த கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவது மட்டுமன்றி சமயபாடம் கூட பரீட்சை நோக்கிலேயே கற்கப்படுகின்றது. சமயம் என்பது ஒரு வாழ்க்கை முறை என்னும் நிலைமாறி ஒரு பாடமாகக் கருதப்படும் இந்நாட்களில், பாடசாலையில் கொடுக்கப்படும் இரு பாட நேரங்களில் பாடத்திட்டத்தை முடிக்கவேண்டுமே என்பது ஆசிரியர்களின் கவலை. உயர்தரப் பரீட்சைகளுக்கு கிறிஸ்தவ பாடம் எடுத்தால் இலகுவில் சித்திபெறலாமென்று குறிப்புக்களை நெட்டுருப்போட்டு பரீட்சை எழுதுபவர்களும் ஏராளம். இத்தகைய கல்வியால் ஓரளவு சமயஅறிவு மாணவர்களுக்குப் புகுத்தப்படலாம். ஆனால் மறைஉணர்வு ஊட்டப்படுவது அரிதாயிருக்கிறது. (இது இவ்வாறு 'இருக்க, ஆசிரியர் இல்லாத பாடசாலைகளில் சிறுபான்மையினரினராக உள்ள கத்தோலிக்க மாணவரின் நிலை என்ன?) அதன் விளைவாக சமய மதிப்பீடுகள் கைவிடப்படுவதையும், இளைஞர் மத்தியில் கட்டுப்பாடின்மை, ஒழுக்கச்சீர்கேடுகள், வன்முறைகள் பெருகி சமுதாயத்தில் அது பிரதிபலிப்பதையும் காண்கின்றோம். இந்நிலை எப்படியாவது மாற்றியமைக்கப்படவேண்டும். குடும்பம், பாடசாலை, ஆலயம் என்னும் மூன்று தளங்களும் இப்பணியில் ஒருங்கிணைந்து செயலாற்றினாலொழிய எமது பிள்ளைகளுக்கு மறையுணர்வை ஏற்படுத்தவும், சரியான கிறிஸ்தவ மதிப்பீடுகளைக் கொடுக்கவும் முடியாது.

எமது பெற்றோரும் ஆசிரியரும் எம்முன்னோரின் அருஞ் செல்வமான விசுவாசத்தை எமக்களித்து, அதை எவ்வாறு வாழவேண்டுமென்று காட்டியதால்தான் இன்று அதை கடைப்பிடித்து வருகின்றோம். நாமும் அதையே செய்யவேண்டுமென இறைவன் எதிர்பார்க்கிறார்.

# சமயம் கற்பிக்க ஆசிரியர்களை நியமியுங்கள்

சமயம் கற்பிக்க ஆசிரியர்களை நியமியுங்கள் என்ற தலைப்பில், 15 ஆவணி 99 – **Messenger** கத்தோலிக்க ஆங்கிலப் பத்திரிகை எழுதிய ஆசிரியத் தலையங்கத்தை மொழியாக்கம் செய்து பாதுகாவலன் வாசகர்களுக்குத் தருகிறோம்.
(ஆ-ர்)

**இன்று நாம் இளைஞர் வன்முறைகளைப்பற்றி வாசிக்கும் போது எமது சமூகத்தில் ஒழுக்க, ஆன்மீக மதிப்பீடுகள் இல்லாது போவதைக் கண்டு கலக்கமுறுவது இயல்பே.** ஆனால் எமது அரசாங்கப் பாடசாலைகளில் சமயபாட ஆசிரியர் குறைபாட்டைப் பார்க்கும்போது எமது இளைஞர், சமய மதிப்பீடுகளின்றி அல்லது குறைவான மதிப்பீடுகளுடன் வளர்வதில் ஆச்சரியமில்லை.

மிகவும் தேவையான சமயச் சூழலை ஏற்படுத்தும் பொருட்டு குறிப்பாக பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்டதன் பின் க.பொ.த. சாதாரண தரம் வரை சமயம் கட்டாய பாடமாக்கப்பட்டது. ஆனால், **தான் பின்பற்றும் சமயத்தில் மறையறிவு பெற ஒரு பிள்ளைக்கிருக்கும் அடிப்படை உரிமையை எமது அரசியல் தலைவர்களும் கல்வி அதிகாரிகளும் மறந்துவிட்டார்கள் போலும்.** தொடர்ந்துவந்த அரசாங்கங்கள் தீர்வுகாண்பதாக அளித்த வாக்குறுதிகள் எல்லாம் வாக்குறுதிகளாகவே இருந்துவிட்டன. முறையீடுகள் செய்யப்படும் போதும் கிளர்ச்சிகள் நிகழும் போதும் நாட்டின் தலைவர் தலையிட்டு நீதியான ஒரு தீர்வு காணப்படுமென உறுதியளிப்பார். ஆயினும் பணித்துறை ஆட்சியின் அசமந்தமான போக்கினால் இந்த உறுதிமொழிகள் அதிகாரத்திலிருப்பவர்களால் பின்பற்றப்படுவதில்லைபோல் தோன்றுகிறது.

**அரசாங்கப் பாடசாலைகளில் கத்தோலிக்க சமயம் படிப்பிக்கும் ஆசிரியர் பற்றிய விடயத்தில் பெற்றோர்களின் நியாயமான தேவைகள் கவனிக்கப்பட வேண்டுமெனத் திருச்சபை வலியுறுத்தி வந்துள்ளது.** ஆனால் இன்றைய நிலையில் கல்வித்துறை அதிகாரிகள் அர்த்தமுள்ள ஒரு தீர்வைக் கொண்டுவருவதில் அத்தனை கரிசனை காட்டுவதாயில்லை. ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளுக்குமுன் நடத்தப்பட்ட ஒரு பரீட்சையையொட்டி இவ்வாண்டில் வைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைகள் நிலைமையைச் சீர்திருத்துவதற்கு எண்ணமில்லை என்பதையும், கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்கள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டதையும் தெளிவாகக் காட்டுகின்றன.

இந்நிலையில் தங்கள் பிள்ளைகளுக்கு தமதுசமயத்தில் ஓர் உறுதியான அடிப்படையை ஏற்படுத்திக் கொடுப்பதற்குப் பெற்றோருக்கு சந்தர்ப்பம் உண்டா? கண்டியில் கத்தோலிக்க சமயம் படிப்பிக்கப்படும் பாடசாலைகளில் கத்தோலிக்கப் பிள்ளைகளைச் சேர்ப்பதில் எவ்வளவு குழப்பம் உள்ளதென நாம் கண்டுள்ளோம். சாதாரண தரப் பரீட்சைக்காக, மற்றொரு சமயத்தைப் படிக்கும்படி மாணவர் நிர்ப்பந்திக்கப்படுவதையும் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம்.

**சிறுபான்மையினரின் தேவைகளை எந்த அரசும் முற்றாகப் புறக்கணிக்க முடியாது.** அதுவும் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதில் மிகுந்த கரிசனையுள்ளதாகக் கூறிக்கொள்ளும் ஒரு அரசு நிச்சயம் அவ்வாறு செய்ய முடியாது.

**கத்தோலிக்க பாட ஆசிரியர்களை நியமிப்பதென அரசு எடுத்த தீர்மானம் அளவுமீறிய தாமதமின்றி அமுல்படுத்தப்பட வேண்டுமென கத்தோலிக்கராகிய நாம் எம்மால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டிய நேரம் வந்துவிட்டது.** எமது பிரதிநிதிகள் என்ற முறையில் அவர்கள் கத்தோலிக்க மாணவரை கத்தோலிக்க சமயம் படிப்பிக்கப்படும் பாடசாலைகளில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். அதிகாரிகள் ஏற்கனவே இருக்கும் உரிமைகளை மீறும்போது வழக்கொழிந்த சட்டங்களை அவர்களது செய்கைக்கு துணைபோக அனுமதிக்கலாகாது.

# தேசிய மறைக்கல்வித் தினத்தையொட்டி இயக்குனருடன் பேட்டி

தேசிய மறைக்கல்வித் தினத்தையொட்டி (செப். 26) யாழ் மறைக்கல்வி நிலைய இயக்குனர் அருட்திரு **R.C.X.** நேசராஜா அவர்களை எமது நிருபர் பேட்டி கண்டபோது, அருட்தந்தை அவர்களும், மறையாசிரியர் திரு. **S.F.** சவுந்தரம் அவர்களும் தெரிவித்த கருத்துக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**நிருபர்: தங்கள் நிலையம் கையாளும் பணிகளைப்பற்றி சுருக்கமாகக் கூறுவீர்களா?**

இயக்குனர்: எமது பணிகளை மூன்று தளங்களில் செய்கிறோம் -- நிலையத்தில், பங்குகளில், பாடசாலைகளில். நிலையத்தில் மறையாசிரியர்களுக்குப் பயிற்சி, கருத்தரங்குகள் நடத்துகிறோம். பங்குகளில் எமது உதவி வேண்டப்படும் போது பாசறைகள், கருத்தரங்குகளை நடத்துகிறோம். எமது நிலையப் பணியாளர்கள் சென்று நடாத்துகிறார்கள். பாடசாலைகளில் பரீட்சைகளை நடத்துகின்றோம்.

**நிரு.: தங்களிடம் பயிற்சிபெற்ற மறையாசிரியர் எந்த வகுப்புவரை படிப்பிக்கத் தகுதியுடையவர்களாய் இருக்கிறார்கள்?**

இயக்.: எமது நிலையத்தில் பயிற்சி பெறுவதற்கு க.பொ.த. (உ. த.) சித்தியடைந்தவர்களையே எடுக்க முயற்சிக்கிறோம். ஆனால் எல்லாப் பங்குகளிலும் அவ்வளவு தகுதியுடையவர்கள் கிடைப்பதில்லை. மேலும் A/L சித்தி பெற்றவர்கள் வேறு படிப்புக்களுக்குப் போய் விடுகிறார்கள். ஆகவே நாம் O/L தகுதியுடையவர்களையும் எடுக்கவேண்டியிருக்கிறது. பயிற்சி பெற்றபின் இவர்கள் O/L வகுப்புவரை படிப்பிக்கக் கூடியவர்களாக இருப்பர்.

**நிரு.: எத்தனையோ பாடசாலைகளில் சமயம் கற்பிக்க ஆசிரியர்கள் இல்லை. இந்த மறையாசிரியர்களை ஏன் அங்கு அனுப்பமுடியாது?**

இயக்.: எமது மறையாசிரியர்களில் 11 பேர் இவ்வாறு பாடசாலைகளில் படிப்பிக்கிறார்கள். ஆனால் பாடசாலை அவர்களுக்கு சம்பளம் கொடுப்பதில்லை. நாங்கள் அவர்களுக்கு கொடுக்கும் ரூ. 500 மிகச்சிறிய தொகையே. ஆனபடியால் பாடசாலைகளில் படிப்பிக்க எல்லோரும் முன்வருவதில்லை. அப்படிப் பலர் முன்வந்தாலும், அவர்களுக்குச் சம்பளம் கொடுக்க எம் நிலையத்தின் நிதிநிலைமை போதாது.

**நிரு.: பாடசாலை நிர்வாகம் இதில் அக்கறை எடுப்பதில்லையா?**

இயக்.: கத்தோலிக்க பிள்ளைகள் மிகக் குறைவாக இருக்கும் பாடசாலைகளில், அவர்களுக்கு மறைக்கல்வி அளிக்க பாடசாலை நிர்வாகம் எவ்வித அக்கறையும் காட்டுவதில்லை. நாம் அனுப்பும் மறையாசிரியருக்கு சம்பளமும் கொடுப்பதில்லை. இப்போது இடம்பெயர்வு காரணமாக கத்தோலிக்க பிள்ளைகள் பல பாடசாலைகளிலும் படிக்க நேர்கிறது. அவர்களுக்குப் பாடசாலையில் மறைக்கல்வி பெற சந்தர்ப்பம் இல்லை. ஆகவே பங்கு மறைக்கல்வி வகுப்புக்களுக்குச் செல்வது அவசியம்.

**நிரு: பங்கு மறைக்கல்விக்கு குறிப்பாக ஏதாவது பாடத்திட்டம் கொடுத்திருக்கிறீர்களா?**

இயக்: சில பங்குகளில் பாடசாலை பாட நூல்களைப் பயன்படுத்துகிறார்கள். "அவர் வளர்க" நூல் வரிசையையும் பயன்படுத்துகிறார்கள். நாம் திட்டவட்டமாக ஒரு பாடத்திட்டத்தை கொடுக்க முடியாது. ஏனென்றால் ஒவ்வொரு பங்கின் நிலைமையும் வேறு. அவர்களால் செயல்படுத்த முடியாத ஒன்றைக் கொடுப்பதில் பயனில்லை.

**நிரு: பங்குகளில் பாசறை அல்லது வேறு நிகழ்ச்சிகளை நடத்துவதற்குத் துணைபுரிவீர்களா?**

திரு. சவுந்தரம்: எங்களிடம் என்ன உதவி கேட்டாலும் செய்யத் தயாராய் இருக்கிறோம். ஆனால் இதுவரை அவ்வாறு உதவி கேட்டவர்கள் மிகக் குறைவு.

**நிரு: பாடசாலை விட்ட இளைஞர்களுக்கு ஏதாவது செய்ய உத்தேசித்துள்ளீர்களா?**

இயக்: நிலையத்தில் அப்படி ஒரு திட்டமுமில்லை. ஆனால் யாராவது அப்படியான ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தால் அதைச் செயல்படுத்த நாம் உதவி செய்வோம்.

**நிரு: மறைக்கல்வி சம்பந்தமான ஏதாவது புத்தகங்களை நிலையம் வெளியிட்டுள்ளதா?**

இயக்: நூல்கள் ஒன்றும் வெளியிடவில்லை. A/L பரீட்சை பாடநூல்களுக்கான விளக்கவுரைகள் வினாவிடைகளைத்தான் மாணவரின் தேவைகருதி வெளியிட்டு வருகிறோம்.

**நிரு: தங்கள் நூலகம் உள்ளகத் தேவைகளுக்குத் தானே பயன்படுகிறது. அதை விரிவுபடுத்தி பிறரும் அதைப் பயன்படுத்த அனுமதிக்க முடியாதா?**

இயக்: பல்கலைக்கழக, ஆசிரிய பயிற்சிக் கல்லூரி மாணவர்களும் அதை பயன்படுத்த அனுமதிக்கிறோம். ஆனால் பொதுமக்களுக்கு இதனைத் திறந்துவிடும் நிலையில் இல்லை. ஏனெனில் விரிவுபடுத்த புத்தகங்கள் வாங்குவது தற்போது சாத்தியமில்லை.

**நிரு: கத்தோலிக்க ஆசிரியர் சங்கமும் உங்கள் நிலையத்தோடு இணைந்து தானே இயங்குகிறது?**

இயக்: ஆம். ஆனால் இப்போது அது முன்போல் அவ்வளவு உற்சாகமாகச் செயற்படுவதில்லை.. செயற்பாடுகள் மிகக் குறைந்துவிட்டன. முன்பு அதை உற்சாகமாக இயக்கி வந்தவர்கள் ஓய்வு பெற்றுவிட்டனர், அல்லது இடம் பெயர்ந்து விட்டனர்.

**நிரு: எதிர்காலத் திட்டங்கள் ஏதாவது உண்டா?**

இயக்: நாம் அடுத்து செய்ய நினைத்திருப்பது பங்குகளோடு தொடர்பு கொள்வது, பங்குகளுக்குச் சென்று அங்குள்ள நிலைமையை அவதானிப்பதுடன் அவர்களுக்கு என்ன உதவிகள் தேவைப்படுகின்றன என்பதை அறிந்து உதவுவதே இத்திட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறை வாழ்வுக் கல்வியின் மலர்ச்சியும் தளர்ச்சியும் மறுமலர்ச்சியும்

**யாழ் மறைக்கல்வி நிலைய பணி பற்றிய ஒரு ஆய்வு - வழங்குபவர் திரு. S. F. சவுந்தரம்**

### மறைக்கல்வியின் ஆரம்பம் :

உயிர்த்தெழுந்த கிறிஸ்து தம் தந்தையிடம் திரும்பிச் செல்லுமுன் தம் திருத்தூதர்களுக்குக் கொடுத்த "இறுதிப் பணி" எல்லா மக்களினத்தாரையும், சீடராக்குங்கள், தந்தை, மகன், தூய ஆவியானவர் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள், "நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள்'' (28:19) என்பதாம். திருத்தூதர்கள் தாம் உய்த்துணர்ந்த உயிரின் வார்த்தையை (1அரு. 1:1) மக்களுக்குக் கற்பித்து இயேசு கடவுளின் மகனென்று விசுவசித்து அவர் பெயரால் வாழ்வு பெற உதவினர். இவ்வாழ்வை வளமாக்கத் தேவையான அறிவைப் புகட்டுதலும், கிறிஸ்துவை மக்களில் உருவாக்க வரலாற்றில் திருச்சபை எடுத்த எல்லா முயற்சிகளும் காலப் போக்கில் மறைக்கல்வி என்ற பொதுப்பெயரால் அழைக்கப் பட்டது என 2ம் அருளப்பர் சின்னப்பர் பாப்பரசரின் இக்கால மறைக்கல்வி அளித்தல் என்னும் மடல் கூறுகின்றது.

### மறைக்கல்வியும் திருப்பணியாளர்களும் :

திருத்தூதர்களைத் தொடர்ந்து திருச்சபைத் தந்தையர்கள் (கிளமெந்து, ஓரிஜன்) மறைக்கல்வி நூல்கள் பல தோன்றக் காரணமாய் இருந்தனர். 3ஆம், 4ஆம் நூற்றாண்டுகளில் மக்களின் மேய்ப்பர்களாய் இருந்தவர்கள் மறைக்கல்வியை வாய்மொழியாகப் போதிப்பதும், நூல்களாக வடிப்பதும் ஆயர் பணியின் முக்கிய அம்சமாகக் கொண்டு செயலாற்றினர். (சிறில், பொன்வாய் அருளப்பர், அம்புரோசியார், அகுஸ்தீனார்) மீட்பின் வரலாறு, திருமறை உண்மைகள், அறநெறி வாழ்க்கை ஆகிய மறைக்கல்வியானது மகிழ்ச்சிச் செய்தியாக முதியோருக்குக் கற்பிக்கப்பட்டது. முதியோர், பெற்றோர், குழந்தைகளுக்கு மறைக்கல்வி ஊட்டி விசுவாச வாழ்வுப் பயணத்தில் பயிற்றி வந்தனர். இக்காலத்தை மறைக்கல்வியின் பொற்காலம் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

### மறைக்கல்வியும் வரலாற்றுத்திருப்பங்களும்:

கால ஓட்டத்தில் மத்தியகாலம் என்று சொல்லப்படுகின்ற (8-16) நூற்றாண்டுப் பகுதி கல்வி, கலைகள், அறிவியல் கண்டுபிடிப்புகள் நாகரீகங்கள் வளர முனைப்பட்ட காலப்பகுதி என்று சொல்லலாம். இக்காலம் திருச்சபையும் பல சவால்களைச் சந்தித்த காலம். உலகியல் வளர்ச்சிக்கு முகம் கொடுக்க விழைந்த திருச்சபை தன் உள் வாழ்வில் பல பலவீனங்களைச் சுமக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. குறிப்பாக மறைக்கல்வி கற்பித்தலின் காத்திரத்தன்மை அருகிப்போக, சமய சாயலைத் தாங்கிய கிறிஸ்தவ வாழ்வில் மூடப் பழக்க வழக்கங்கள் மலியத் தொடங்கின. வேரற்ற, மேலெழுந்த வாரியான விசுவாசமே இருந்தது. அகவாழ்வு பல சமயங்களில் அருவருப்புக்குரியதாய் இருக்க, புறவாழ்வு கிறிஸ்தவ மயமான ஒன்றாக இருந்தது. இக்காலத்தில் திருச்சபையின் போதனைக்கு, வாழ்வுக்கு சவாலாக திருச்சபைக்குள் இருந்தே எதிர்ப்பியக்கங்கள் தோன்றவும், வளரவும் தொடங்கின. இந்த நெருக்கிடையான காலத்தில் தப்பறையான போதனைகளிலிருந்து மக்களைக் காக்கும் நோக்கோடு இலகுவான மனனம் செய்கின்ற கற்பித்தல் முறைகளைக் கையாண்டு தேவைக்கேற்ற மறைக்கல்வி கற்பிக்கப்பட்டது. இக்கல்வி மெய்மையான, உயிரூட்டமான ஒரு கிறிஸ்தவ சமூகத்தை வளர்க்க எவ்வளவு தூரம் உதவியது என்பது கேள்விக்குறியே.

### மறைக்கல்வி மறுமலர்ச்சி :

மத்தியகாலத் திருச்சபை பொருள், ஆள் பலத்தால் வெளிப்பார்வைக்கு பரந்து விரிந்த ஓர் உறுதியான ஸ்தாபனமாகக் காணப்பட்டாலும் தனிமனித, குடும்ப, குழும, சமூக, அரசியல் வாழ்க்கையில் சீரழிவுகள் மிகுந்து குற்றச் செயல்கள் மலிந்து இன்னுமொரு மகாயுத்தம் வெடிக்குமோ என்ற நிலையில்தான் இருந்தது. இந்த நிலைக்கான காரணம் ஒழுங்கான மறைக்கல்விப் போதனையும், வழிகாட்டலும் இல்லாமையே என்பது பலருக்குத் தெளிவானது. திருச்சபையின் மறைக் கல்வி நிபுணர்களால் தீவிரமாக மறைக்கல்வி மகாநாடுகள் ஆங்காங்கே கூட்டப்பட்டன. மறைக் கல்வி கற்பித்தல் முறைகளில், கற்பித்தல் பொருளடக்கத்தில், ஏன் கற்பித்தலின் நோக்கத்திலும் கூட புதிய புதிய அணுகுமுறைகள் கையாளப் பட்டன. கிறிஸ்துவின் மனநிலைக்கொத்த ஒரு புதிய சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் உயர்ந்த நோக்குடன் அகில உலகத் திருச்சபை அடங்கிலும் அதிதீவிர மறைக்கல்விச் செயல்பாடுகள் இடம் பெற்றன.

### 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் பின் மறைக்கல்வி :

சங்கம் தந்த தங்க ஏட்டில், கிறிஸ்தவக் கல்வி என்ற கொள்கைத் திரட்டில், 4ம் பிரிவில் சிறப்பான முறையில் மறைக்கல்விப் பணிசெய்ய தேவையான அறிவித்தல்கள் எல்லாம் விபரமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதன் அடிப்படையில் பங்கு மட்டத்தில் மறைக்கல்வி மன்றங்கள், மறைமாவட்ட நிலையில் மறைக்கல்வி நிலையங்கள், தேசிய நிலையில் ஒருங்கிணைந்த தேசிய மறைக்கல்வி நிலையம், இவ்வாறு தோற்றுவிக்கப்பட்டு மறைக்கல்வி சம்பந்தமான சகல செயற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றன.

### யாழ் மறைக்கல்வி நிலையம் :

முதல் சுதேச தமிழ் ஆயரான மேன்மைமிகு எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை யாழ்ப்பாண ஆயராக இருந்த பொழுது ஆயர் இல்லத்தில் மறைக்கல்வி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. இந் நிலையத்தின் முதல் இயக்குனராக அருட்தந்தை ஜி. ரி. பாலசுந்தரம் அ.ம.தி. அடிகளார் பெறுப் பேற்றார். அவர் காலத்திலேயே தற்போதுள்ள நிலையத்தின் ஒரு பகுதி கட்டப்பட்டு புதிய கட்டிடத்திற்கு நிலையம் இடமாற்றம் செய்யப் பட்டது. அருட்தந்தையர்கள் தோமஸ் சவுந்தர நாயகம் (தற்போதைய ஆயர்), ஜே. நீக்கிலஸ், நேசநாயகம், சகாயநாயகம் இவர்களைத் தொடர்ந்து தற்போது ஆர். சி. எக்ஸ். நேசராஜா அவர்களும், இந்தியாவில் பயிற்சிபெற்ற நிரந்தர மறை ஆசிரியர்களும், நிலையத்தில் பயிற்சி பெற்ற இரண்டு பேரும், ஒரு அருட்சகோதரியும் நிலையத்தில் பணிபுரிகின்றார்கள்.

### நிலையப் பணிகள் :

பங்குகளில் மறைக்கல்வி கற்பிப்பதற்கு தகுதியானவர்களைத் தெரிவுசெய்து நிலையத்தில் தங்குமிட வசதியும் அளித்து பயிற்சி அளித்தல். பயிற்சி பெற்ற மறை ஆசிரியர்களுக்கு பங்கு, மறைக்கோட்ட, மறைமாவட்ட நிலைகளில் கூட்டங்கள், கருத்தரங்குகள், புத்தூக்க வகுப்புகள் நடாத்துதல்.

பாடசாலைகளில் கத்தோலிக்க சமயபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகள் நடாத்துதல்.

பங்கு நிலையில் முதல்நன்மை, உறுதிபூசுதல் பாசறைகள் நடாத்துதல், தேசிய நிலையில் மறைஆசிரியர் தேர்வுகள் எடுக்கும் மாணவர்களுக்கு ஆயத்த வகுப்புக்களை நடாத்தி தேர்வுக்கு ஆயத்தம் செய்தல்.

பங்குகள் தோறும் பெற்றோருக்கான மறைக்கல்வி விழிப்புணர்வுக் கருத்தரங்குகள், கண்காட்சிகள் நடாத்துதல்.

வேதாகம வினாவிடைப் போட்டிகளை பங்குநிலையில் மாணவர்களின் வயதிற்கேற்ற பிரிவுகளில் நடாத்தி, விவிலிய அறிவை விருத்தி செய்தல், க.பொ.த சாதாரண, க.பொ.த உயர்தர தேர்வு எடுக்கும் மாணவர்களுக்கு உதவியாக பாடக் குறிப்புக்களை அச்சிட்டு கொடுத்தலும், முன் ஆயத்த வகுப்புக்களை நடத்துதலும்.

ஆசிரிய கலாசாலைகளில் கத்தோலிக்க பாடநெறிகளுக்கு உதவுதல்.

வருடத்தின் மூன்றாம் தவணைக் காலத்தில் பாடசாலை நிலையில் 5ஆம் ஆண்டு முதல் 11ஆம் ஆண்டு வரையுள்ள கத்தோலிக்க மாணவர்களுக்கு பாடத்திட்டத்திற்கு அமைவாக தேர்வு நடத்தி விடைத்தாள்களை மதிப்பீடுசெய்து அவர்களின் நிலை அறிய உதவுதல்.

மறைஆசிரியர் சங்கம், கத்தோலிக்க ஆசிரியர் சங்கங்கள் இவற்றின் செயற்பாடுகளுக்கு பக்க பலமாக இருத்தல்.

வேதாகமம் மற்றும் சமயநூல்களை வருவித்து விநியோகித்தல்.

பங்குத்தந்தையர்கள் மறைக்கல்வி சம்பந்தமாக நிலைய உதவிக்காக விண்ணப்பிக்கும் பொழுது உடன் உதவுதல்.

### பாடசாலைகளில் மறைவாழ்வுக் கல்வியை நாம் எதிர்பார்க்கலாமா?

நாம் ஒரு காலத்தில் மறைஅறிவைப் பெற்றுக்கொள்கின்ற [illegible] பாடசாலைகளை வைத்திருந்தோம். ஒவ்வொரு கத்தோலிக்க கிராமங்களிலும் ஆலயங்களுக்குப் பக்கத்தில் ஆரம்ப பாடசாலைகளும், நகர்ப்புறங்களில் கல்லூரிகளும் இயங்கிவந்தன. அப்போது பாடசாலைகள், ஆசிரியர்கள், கத்தோலிக்க ஆசிரிய கலாசாலைகள் கத்தோலிக்க பீடத்தின் நிர்வாகத்தில் இருந்தது. வாரத்தின் ஐந்து நாட்களிலும் முதல் பாடமாக மறைக்கல்விப் பாடம் நேரசூசியில் இடம்பெற்றது. பாடசாலைகளில் சமயச்சூழல் பேணப்பட்டது. செபவழிபாடுகள் அடிக்கடி இடம் பெற்றன. கத்தோலிக்க மதகுருமார் பாடசாலைகளைச் சந்தித்து மாணவர்களின் சமய உருவாக்கலைக் கவனித்து வந்தார்கள். பெற்றோர் தம் பிள்ளைகளின் மறைஅறிவு, உருவாக்கம் எல்லாவற்றிற்கும் பாடசாலையை நம்பியிருந்தார்கள். ஆனால் இன்று அந்த நிலை இல்லை. பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டதில் இருந்து மறைக்கல்வி விடயத்தில் பல பின்னடைவுகள் இடம்பெறலாயின. முன்பிருந்த அனைத்து நிலைகளிலும் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. மறைக்கல்வி வாரத்தில் இரண்டு பாடவேளைக்கு குறைக்கப்பட்டது. இன்று பாடசாலைகளில் மறை அறிவு, உருவாக்கம் என்பது முழுமையாக எதிர் பார்க்கக்கூடியதொன்றல்ல.

### குடும்பம்தான் கிறிஸ்தவ உருவாக்கலின் தொட்டில் :

ஒரு சமூகத்தின் அடிப்படை அலகு குடும்பம். குடும்பத்தில்தான் பிள்ளைகள் அதிக காலத்தைச் செலவிடுகின்றார்கள். குறிப்பாக ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளின் வாழ்வு முழுவதும் குடும்பத்தோடு தான் என்று சொல்லலாம். ஐந்து வயதிற்குள் ஒரு குழந்தை முழுவாழ்வில் தான் பெறவேண்டிய கல்வியின் அரைப்பகுதியை பெற்று விடுகின்றது என்று சொல்லுகிறார்கள். எனவே குடும்பம்தான் பிள்ளைகளின் முதல் பாடசாலையும், பெற்றோர்தான் முதல் ஆசிரியர்களும் என்று சொல்வது பொய்யானதொன்றல்ல. எனவே பெற்றோர்களாகிய நாம் இனிவரும் காலங்களிலும் எமது பிள்ளைகளின் மறைவாழ்வு உருவாக்கத்திற்கு பாடசாலைகளையோ, மதவழிபாட்டு இடங்களையோ நம்பி இருந்து ஏமாந்து போகக் கூடாது. தாமே பொறுப்பெடுத்து பிள்ளைகளை வழிப்படுத்த வேண்டும். சமயச்சூழல் இல்லத்தில் மணம் கமழச் செய்யவேண்டும். திருச்செபமாலையும், திருவாசகமும் அடிக்கடி இடம்பெற வேண்டும். பிள்ளைகள் வழிபாடுகளில் உணர்வோடும், உயிர்ப்போடும் பங்கு பற்றுகிறார்களா என்பதை அக்கறையோடு விசாரிக்க வேண்டும்.

ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணத் திருச்சபையின் ஆரோக்கியமான வாழ்வுக்கு பெற்றோரே பொறுப்பாய் இருந்து வீரத்துவமான விசுவாச வாழ்வுக்கு சாட்சிகளாய் இருந்தது போல, நெருக்கடையான இந்தக் காலத்திலும் பெற்றோர் தம் பொறுப்புணர்ந்து கடமை செய்து வழி நடப்பார்களென்றால் மறைவாழ்வு மலரும்.

தேசிய மறைக்கல்வித் தினத்தைக் கொண்டாடுகின்றபொழுது நம் ஒவ்வொருவருடைய குடும்பங்களையும் மறைக்கல்வி பயிலும் திருக்கோவிலாக்கி கிறிஸ்தவ உருவாக்கத்தை நிறைவு செய்து புதிய சமுதாயம் படைக்க திடசங்கற்பம் பூணுவோம்.

---

## யாழ் மறைக்கோட்ட இளைஞர்தின திறன் விருத்தி நிகழ்வுகள்

யாழ் மறைக்கோட்ட இளைஞர் மன்றங்களுக்கிடையிலான திறன்விருத்தி நிகழ்வானது நடைபெறவுள்ளதால் இதில் கலந்து கொள்ள ஆயத்தங்களை மேற்கொள்ளவும். உங்கள் அங்கத்தவர் பெயர்ப்பட்டியல், திறன்விருத்தி நிகழ்வில் பங்கு பெறும் அங்கத்தவர் விபரம், மன்ற அங்கத்தவர் குழுப் புகைப்படம் என்பவற்றை 15-9-99க்கு முன் "அகவொளி" நிலையத்திற்கு அனுப்பிவைக்கவும்.

**திறன் விருத்தி நிகழ்வுகள்**

- ☆ கையேட்டு சஞ்சிகை ☆ ஓவியம்(விரும்பியவர்)
- ☆ கவிதை(விரும்பியவர்) ☆ கட்டுரை(விரும்பியவர்)
- ☆ விவிலிய வினாவிடை (அங்கத்தவர் 5)
- ☆ உதைபந்து (ஆண்கள் 9 நபர்)
- ☆ வலைப்பந்து (பெண்கள் 6 நபர்)

மேற்படி நிகழ்வுகளுக்கான விதிகள் தங்களுக்கு அனுப்பிவைக்கப்படும். உங்கள் பங்களிப்பை உறுதிப்படுத்துங்கள்.

தகவல் : யே. இக்னேஷியஸ்(பிரபா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காவலன் கண்மணிகள்

| ஒளி : 10<br>சுடர் : 5 | "எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு" |
|---|---|

அன்புக் கண்மணிகளே!

குழந்தை யேசுவின் ஆசிகள் உங்களுள் நிறைவதாக. அஞ்சல் வழித் தாமதத்தால் விடைகள் வருவதில் தாமதம் ஏற்படுகிறது. எனவே சுடர் 4இல் அறிவித்ததுபோல் விடைகளையும் பரிசு பெறுவோரையும் இச்சுடரில் அறிவிக்க முடியாமைக்கு வருந்துகிறேன். அடுத்த சுடரில் இவை நிச்சயமாக வரும்.

கண்மணிகளே!

புனித மாக்சிமிலியான் கோல்பேயின் வரலாற்றுத் தொடரைத் தொடர்ந்து வாசியுங்கள். புனிதர்களின் வரலாற்றுப் பாதை பார்த்து உங்கள் பாதையும் மாறக்கூடும்.

புனிதர்களின் பாதை சத்தியப் பாதை
சரியான பாதை
நித்தியப் பாதை
நிலையான பாதை
உத்தம பாதை
உயரிய பாதை

உற்று உணர்ந்து படியுங்கள்.

கண்மணிகளே! இதோ உங்கள் ஆக்கங்கள்.

1. முயற்சியே வெற்றியின் முதற் படிக்கல். – இது நண்பர்களின் கதை. தொடர்ந்து வரும்.
2. தொலைக்காட்சி. – பெற்றோருக்குப் படித்துக் காட்டுங்கள். மனக்கவலை தீர உதவி புரியுங்கள்.
3. பின்பற்றுவோம் அவர் வாழ்வை. – படியுங்கள். பின்பற்றுங்கள்.
4. ஏற்றி! ஏற்றித் தொழுவோமே! – எழுதிச் செயலிலும் காட்டுங்கள்.

நன்றி.

அன்பின்
அன்புவிழி

## முயற்சியே வெற்றியின் முதற் படிக்கல்

காலை வேளை! கதிரோனின் கதிர்கள் "சுந்தர் அனாதை அகத்"துள் பாய்ந்து ஒளி கொடுத்தன. பறவைகளின் இனிய நாதம் அகத்தினைச் சுற்றிக் கேட்டன. அவ்வேளை கண்ணன் வானொலியை இயக்கினான்.

வானொலியில் அப்பொழுது வந்த கதை, கண்ணனின் கதைபோல் அமைந்தது. அதைக்கேட்ட கண்ணன் மனம் சிட்டாகப் பின்னோக்கிப் பறந்தது.

ஏழையான சுந்தரும், பணக்காரக் கண்ணனும் இணைபிரியா பாடசாலை நண்பர்கள். படிப்பிலும் இருவரும் கெட்டிக்காரர்கள். பாடசாலைப் பரிசளிப்பு விழாவுக்கு கண்ணனை அழைத்துச் செல்ல சுந்தர் கண்ணன் வீட்டிற்குச் சென்றான்.

வீட்டு வெளிவாசலில் நின்ற கண்ணனின் தந்தை சுந்தரை வீதியில் நிறுத்திவைத்தார். "டே சுந்தர், உங்கட சிநேகிதத்தை பள்ளிக் கூடத்தில வைச்சுக்கோ! வீடுவரை வராதே! விளங்குதோ, நீ திரும்பிப் போகலாம்" என்று கடும் குரலில் கூறினார்.

மனம் உடைந்த சுந்தர் பாடசாலை நோக்கித் தளர்ந்த நடையுடன் சென்றான். பரிசளிப்பு விழா தொடங்கியது. கண்ணன் பெயர் பரிசுக்காக வாசிக்கப்பட்டது. கண்ணன் வரவில்லை. சுந்தர் பல பரிசுகள் பெற்றபோதும் அவன் மனம் கண்ணனை நினைத்துக் கலங்கியது. பரிசளிப்பு விழா முடிந்ததும் சுந்தர் கண்ணன் வீடு நோக்கிப் பறந்தான். அங்கே . . .

(தொடரும்)

**********

## தொலைக்காட்சி –ம.ஷிறோ(அ. எ. 327)

**பெற்றோரின் மனவேதனை போக்க!**

பெற்றோரே! தொலைக்காட்சி பார்ப்பது ஓய்வு நேரத்தில் என்பதை உங்கள் செல்வங்களுக்கு உணர்த்துங்கள்.


தொலைக்காட்சியின் உச்சப் பயனைப் பெற பெற்றோராகிய நீங்கள் ஒரு முன்மாதிரியாக இருக்கவேண்டும். ஒருதாய் தன் மகனைப் படியென்று சொல்லிவிட்டு தான் போய் தொலைக்காட்சிக்கு முன் இருந்தால் மகன் படிப்பானா? உலகத்தை அறிய! விஞ்ஞான விந்தைகளை விளங்கிக் கொள்ள! வழிகாட்டியாக இருக்கவேண்டியவர் பெற்றோரே!

**********

# புனித மாக்சிமிலியான் கோல்பே







சில நபர்கள் ஒறுத்தல் செய்து சேமித்த பணத்தை அனுப்பிவைத்ததால், மறைத்திரு மாக்சிமிலியான் இன்னும் பல நபர்களுக்கு தன் பத்திரிகையை அனுப்பினார். அவர்களும் ஒறுத்தல்க்ள் செய்து சேமித்த பணத்தை அவருக்கு அனுப்பினார்கள். எனவே பத்திரிகையின் எண்ணிக்கை ஒவ்வொரு மாதமும் உயர்ந்தது.

பத்திரிகையைத் தொடர்ந்து படித்த சில இளைஞர்கள் அதனை அதிகம் விரும்பிப் படித்தனர், பாராட்டினர். அநேகருக்குப் பத்திரிகை அதிகம் நன்மை விளைவிப்பதைக் கண்டு பிடித்தனர். மறைத்திரு மாக்சிமிலியானுக்கு அவருடைய பணியில் உதவி புரியவேண்டும் என, அவர்கள் கருதினர். எனவே அவர்கள் அவரைச் சந்திக்கச் சென்றனர்.

மறைத்திரு மாக்சிமிலியான் அவர்களை மகிழ்ச்சியோடு வரவேற்றார். அவர்களுடைய பணி அச்சகத்திற்குத் தேவைப்பட்டது. ஆனால் தங்கள் பணியில் நல்ல முறையில் ஈடுபடுவதற்காக, மாசற்ற மரியாளுக்குத் தங்களை அர்ப்பணம் செய்து துறவறச் சகோதரர்களாக மாறவேண்டும் என்று அவர்களிடம் சொன்னார். அவர்களும் மகிழ்ச்சியோடு ஒப்புதல் அளித்து. துறவறத்திற்குரிய ஆடையை அணிந்துகொண்டனர்.

(தொடரும்)

'உதயன்' பத்திரிகை மீதான குண்டுத் தாக்குதலைக் கண்டித்து 31.08.99 அன்று யாழ். நகரில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியின் போது 'பாதுகாவலன்' பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். அப்போது எடுக்கப்பட்ட படங்களைக் கீழே காணலாம்.

மின்னல் தந்த செய்திக்கு குண்டில் பதிலா?









## பின்பற்றுவோம் அவர் வாழ்வை

வைக்கோலில் பிறந்தவனே
வையத்தாருக்காய் வாழ்ந்தவரே
மானிட வாழ்க்கையிலே
மனமாற்றம் தேவையென்று
கால்நடையாயெங்கும் சென்று
காலமெல்லாம் அன்புச்செய்தி அறிவித்து
எம்மவர்க்காய் தன்னுயிர் தந்து
எம்மை பாவக்குழியிலிருந்து மீட்டு
வெற்றி வேந்தனாய் உயிர்த்தெழுந்து
வெண்மையுள்ளம் கொண்ட
உத்தமனின் அடிச்சுவட்டை
நம் வாழ்வில் கடைப்பிடித்து
தூயவர் வாழ்வை எம் வாழ்வாகக் கொண்டு
இரண்டாயிரம் ஆண்டை நோக்கி
இடையூறுகள் இன்றிப் பயணம் செய்ய
பரம தந்தையின் பதம் பணிந்து
பாடுவோம் அவர் புகழை
பின்பற்றுவோம் அவர் வாழ்வை

செ. றதி
அ. எ. 329

**********

## ஏற்றி! ஏற்றித் தொழுவோமே!

இறைவன் மிகவும் நல்லவர்
எமக்காய் என்றும் வாழ்பவர்
எளியோர் எம்மைக் காக்கவே
ஏழ்மையாய் இங்கு வந்தவர்

பாவிகள் எம்மை ஈடேற்ற
பாரச் சிலுவை சுமந்தவர்
பாவமெல்லாம் நீக்கிடவே
பாடுகள் பலவும் பட்டவர்

கல்வாரி மலையின் உச்சியிலே
சிலுவை மரத்தின் மீதினிலே
உயிரை ஈந்து எமக்காக
பிதாவினிடத்தில் வேண்டியவர்

சாவை எமக்காய் வென்றவர்
சத்தியனாய் மீண்டும் வந்தவர்
சாற்றியே என்றும் அவர் புகழை
ஏற்றி ஏற்றித் தொழுவோமே

சி. நிசாந்
அ. எ. 328

**********

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவ உலகில் நடப்பவை சில . . .

தொகுப்பு : ஆ. அஜந்

## இந்தியப் பொதுத் தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது?

சிறுபான்மையினரான கிறிஸ்தவர்கள் வருகின்ற பொதுத் தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது என்பது பற்றி முடிவு செய்ய தமிழ்க் கத்தோலிக்க கிறிஸ்தவப் பேரவையின் சிறப்புக் கூட்டம் 25.07.99 அன்று பிராட்வே தூய மரியன்னை இணைப் பேராலயப் பங்கு மன்றத்தில் திரு. ஐ. அருள்ராஜ் தலைமையில் நடைபெற்றது. கூட்ட முடிவில் கீழ்க்காணும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

1) மத்வாதக் கட்சிகளுக்கும், மதவாதத்தை ஆதரிக்கும் கட்சிகளுக்கும், அவர்கட்கு துணைநிற்கும் கட்சிகளுக்கும் கிறிஸ்தவர்களின் ஆதரவு கிடையாது.
2) மத்தியில் நிலையான ஆட்சியமைக்க உதவுவதற்காகவும், நாட்டில் மதச் சார்பற்ற ஆட்சியினை நிலைநாட்டவும் காங்கிரஸ் (இ) கட்சிக்கு நமது ஆதரவு. "குறைந்த தீமையைத் தெரிந்துகொள்" என்ற அடிப்படையில் காங்கிரசின் தோழமைக் கட்சியான அ.தி.மு.க. விற்கு நமது ஆதரவு.

## மரியம் திரேசியாவுக்கு முக்திப்பேறு

கேரளாவில் திருக்குடும்ப கன்னியர்கள் துறவறச் சபையை ஆரம்பித்த மரியம் திரேசியா என்பவருக்கு முத்திப்பேறு பட்டம் அளிப்பதற்கான அறிக்கையை திருப்பீடம் ஏற்றுள்ளது.

1914ம் ஆண்டில் மே 14ம் திகதி குடும்ப அப்போஸ் தலத்துவத்திற்காக இவர் ஆரம்பித்த சபையினர், தற்போது ஆபிரிக்கா மற்றும் ஐரோப்பாவிலும் இல்லங்களைக் கொண்டுள் ளனர். 1820 கன்னியர்கள் உள்ளார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

## தமிழக குருத்துவக் கல்லூரியில் திருத்தந்தையின் பிரதிநிதிகள்

எதிர்காலக் குருக்களுக்கு சரியான முறையில் போதிய பயிற்சியளிக்கப்படுகிறதா எனக் கண்டறிய, திருத் தந்தையின் பிரதிநிதிகள் தமிழக குருத்துவக் கல்லூரிக்கு அனுப்பப்பட்டுள்ளார்கள்.

தலத்திருச்சபையின் வளர்ச்சியில் திருத்தந்தைக்கு உள்ள ஆர்வத்தை இம்முயற்சி வெளிப்படுத்துவதாக இந்த ஆணைக்குழுவின் தலைவரும், பாண்டிச்சேரி மறைமாவட்ட ஆயருமான மைக்கேல் அகஸ்ரின் தெரிவித்துள்ளார். ஆன்மீகம், மனிதம், அறிவுபூர்வமான விஷயங்கள், மேய்ப்புப் பணிகளில் குருத்துவ மாணவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சிகள் குறித்து ஆராய்வதும் அதை மேம்படுத்துவது குறித்தும் திட்டமிடுவது தான் இந்த ஆணைக்குழுவின் பணியாகும். இதற்காக தமிழகத்தின் அனைத்துக் குருத்துவக் கல்லூரிகளுக்கும் இந்த ஆணைக்குழு சென்று குரு மாணவர்களையும் பேராசிரியர்களையும் சந்திக்கின்றது. இக்குழு தயாரிக்கும் அறிக்கையானது, டெல்லி பேராயர் ஆலன் டிலாஸ்டிக் அவர்களிடம் அளிக்கப்பட்டு அவர் வழியாகத் திருத்தந்தைக்கு அனுப்பப்படும்.

## அன்னை திரேசாவின் புனிதர் பட்டப் பணி
## துரிதப்படுத்த திருத்தந்தை ஆர்வம்

அன்னை திரேசாவிற்குப் புனிதர் பட்டம் வழங்குவதற் கான தயாரிப்புப் பணிகளை விரைவுபடுத்த திருத்தந்தை விரும்புவதாக இந்தியாவிற்கான திருத்தந்தையின் தூதர் பேராயர் லொரன்சோ தெரிவித்தார். கல்கத்தா பேராயர் மேதகு ஹென்றி டிசூசா இதற்கான பணிகளை ஏற்கனவே தொடங்கி யுள்ளதாகவும் ஆயர் கருத்துத் தெரிவித்தார். திருத்தந்தையின் இந்தியத் தூதராகப் பெறுப்பேற்று வந்துள்ள பேராயருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சியில் செய்தியாளர்களிடம் இதைத் தெரிவித்தார்.

திருத்தந்தையின் தூதுவர் இதற்குமுன் குவாட்டமாலா, ஜப்பான், பிரேசில், பராகுவே, பிரான்ஸ், சிம்பாப்வே, ஹெயிட்டி ஆகிய நாடுகளில் பணியாற்றியுள்ளார். திருத்தந்தை ஆசிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்ளும் போது இந்தியா வர விரும்புவதாகவும், அதற்கான திகதி இன்னும் உறுதி செய்யப்படவில்லை என்றும் கூறிய தூதுவர், "திருத்தந்தை பொதுநிலையினருக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறார். வருங்காலத் திருச்சபை பொதுநிலையினர் கையில் தான் உள்ளது" என்றார்.

# களத்தில் . . .

05.09.1999 அன்று பாதுகாவலன் ஆசிரியர் நிருபர்கள் இணைந்து சென்று அன்னை திரேசா அமைதி இல்லத்தை தரிசித்தனர். அதில் பங்குகொண்ட நிருபர்களின் மனப்பதிவுகளை பகிர்வதில் மகிழ்வடைகிறோம். அன்னையின் சபை அருட்சகோதரிகளிடம் பேட்டி கண்டோம்.

**நிருபர்: உங்கள் பயிற்சி, பணிகளைப் பற்றி சற்றுக் கூறுங்கள்?**

அருட்சகோதரி: எமது பயிற்சி, பணிகளைப் பற்றி நீங்கள் தெரிந்துகொள்வதை நாம் வரவேற்கிறோம். எமது பயிற்சியானது, ஒரு வருடப் படிப்பு கொழும்பிலும், மூன்று வருடப் படிப்பு இந்தியாவிலுமாக அமையும். பின் ஐந்து வருடம் பயிற்சிக்காக வேறு இடங்களுக்கு அனுப்பி வைப்பார்கள். அதன் பின்புதான் எமது முழுமையான பணி ஆரம்பமாகும்.

**நிரு: உங்களின் பணி எப்படிப்பட்டது? அவைகளைப் பற்றி சற்று சுருக்கமாகக் கூறுங்களேன்?**

அருட்: எமது பணியானது ஏழைகள், எளியவர்கள், வறியோர், தாழ்ந்தோர், கைவிடப்பட்டோர் இப்படிப்பட்ட துணையின்றி வாழும் மக்களுக்கு தோளுடன் தோள்நின்று அவர்களுக்குத் துணைபுரிவது, அவர்களுடைய அன்றாடத் தேவைகளைப் பூர்த்திசெய்வது போன்றதாகும்.

**நிரு: அன்னை திரேசா சபையில் ஓர் சபைதான் உண்டா? இல்லாவிடில் வேறுசபைகளும் உண்டா?**

அருட்: எமது அன்னையின் உருவாக்கலில் ஒன்பது சபைகள் உண்டு (கன்னியர்களுக்கு மட்டும்). அதைவிட குருக்களும், அருட்சகோதரர்களும் உள்ளார்கள். இவர்களிலும் பல சபைகள் உண்டு.

**நிரு: உங்களின் பயிற்சி முடிந்த பின்பு எங்கு திருநிலைப்படுத்துவார்கள்?**

அருட்: எமது திருநிலைப்படுத்தல் ரோமாபுரியில்தான் நடைபெற்றுவந்தது. தற்பொழுதும் அங்குதான் நடைபெறுகிறது. எமது பணிகளில் தற்போது (இங்கு) எம்முடன் ஒரு அம்மாவும் ஓர் சிறுவனும் உள்ளார்கள். அம்மா கண் பார்வையற்று இருந்தார். எமது விடாமுயற்சியால் அவவிற்கு கண்பார்வை கிடைத்துள்ளது. சிறுவனும் பெரும் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளான். அவரையும் நாம் மிகவிரைவில் குணமாக்குவோம்.

நாம் அங்கு கூடிநின்ற மக்களிடம் "இந்தக் கன்னியர்கள் உங்கள் மத்தியில் எப்படி உள்ளார்கள்? இவர்கள் இங்கு இருப்பதால் உங்களுக்கு நன்மையுண்டா?" எனக் கேட்டோம். அதற்கு அவர்கள், "இந்தச் சகோதரிகள் எமக்கு இக்காலகட்டத்தில் பெரும் பாதுகாப்பும், துணையும், உதவியுமாக இருக்கிறார்கள். அனாதைகள் மத்தியில் பெரும் அக்கறையும், கரிசனையும் கொண்டுள்ளார்கள். இவர்கள் பணி தொடரவேண்டும் என்பதே எமது விருப்பம்" என்று கூறினார்கள்.

அஜந்குமார் (அரியாலை.நிருபர்)

கடந்த சில மாதங்களாக யாழ்ப்பாணத்தில் சில கன்னியாஸ்திரிகள் வந்து ஏழைகள் கைவிடப்பட்டோர் நோயாளிகள் போன்றவர்களை கண்காணித்து வீடுவீடாகச் சென்று மக்களின் நிலையை அறிந்து துன்பத்தில் வாடுவோரை ஆதரிப்பதை அறிந்திருந்தோம். அதனை நேரில் சென்று தரிசித்தபோது நாம் ஏன் அப்பணியை ஆற்றக்கூடாது என்ற கேள்வி என் மனதில் எழுந்தது. பத்து வருடங்களுக்கு ஒருமுறையே இவர்கள் பெற்றோரை சந்திக்கிறார்கள். அவ்வாறு இவர்கள் இருப்பதற்கு அவர்களிடம் காணப்பட்ட பொறுமை, தியாகம், சேவை மனப்பான்மையை கண்டு வியந்தேன்.

ஆசீர்வாதம் றஜீனா (நீர்வேலி நிருபர்)

அன்னை திரேசா மாதிரியே தோற்றமளித்த அருட்சகோதரிகள் பரிவு, அடக்கம் நிறைந்த சேவையுடன் உதவிதேடி வந்தவர்களை அரவணைத்து, ஆறுதல்கூறி, உதவிசெய்தனர். நோயுற்ற சிறுவன் ஒருவனை பராமரித்து வருவதைக் கண்ணுற்றபோது அவர்களது சேவையின் மகத்து வத்தை உணர முடிந்தது.

யோ. கீதபொன்கலன் (ஆனைக்கோட்டை நிருபர்)

அன்னை திரேசா இல்லத்தில் மதவேறுபாடின்றி, சகல இடங்களிலுள்ள வறிய மக்களுக்கும் உதவிபுரிவதை பல மக்களும் பாராட்டி, வியந்து வாழ்த்தியதைக் கண்ணுற்ற போது அவர்கள் சேவை எமது மண்ணில் தொடர வேண்டுமென என் மனம் எண்ணிக் கொண்டது.

டெ. சே. சுவைனஸ் (குருநகர் நிருபர்)

இன்று எம்மிடையே பெயர், புகழ் போன்றவற்றிற்கான அன்பளிப்புகள் பரிமாறப்படுகின்ற வேளையில், அமைதி இல்லத்தில் "இச்சிறியோருக்குச் செய்ததெல்லாம் எனக்கே செய்தீர்கள்" என்ற இயேசுவின் வார்த்தை நிதர்சனமாவதைக் காணமுடிந்தது.

சூ. மரியநாயகம் (சுண்டுக்குளி நிருபர்)

இறைவனின் குரலை ஏற்று; அவரின் திருவுளத்தை தன் வாழ்வாக மாற்றி, இயேசுவின் மீட்புப்பணியை தொடர்ந்து இவ்வுலகில் ஆற்றி, எம் உள்ளங்களில் நீங்காத நினைவாக நிறைந்து நிற்கும் அன்னையின் பணிதொடர்வதை நேரடியாகக் காண முடிந்தது.

றொ. துவாரகா, J. றொசான் (உரும்பிராய் நிருபர்கள்)

அன்னை திரேசா அவர்களுடன் உடனிருந்து பணிபுரிந்த கன்னியரை நேரடியாகச் சந்தித்து உரையாற்றியது, அன்னை அவர்கள் எமது யாழ் மண்ணில் வாழ்கிறார்கள் என்ற உணர்வை ஊட்டியது.

பூ. சதீஸ் (அரியாலை நிருபர்)

துன்ப துயர நிகழ்வுகளின் மத்தியில் வாழும் எம்மக்களுக்கு ஓர் கலங்கரை விளக்காக அன்னையின் அமைதி இல்லம் திகழ்கிறது.

C. C. கொலீந்திரன் (நல்லூர் நிருபர்)

மனிதம் மரணித்துக் கொண்டிருக்கும் எம்மண்ணில் மனித மாண்பை கட்டியெழுப்பும் உன்னத பணியின் சிற்பிகளாகத் திகழும் அன்னை திரேசா அமைதி இல்ல அருட் சகோதரிகளின் பணி எம்மண்ணில் விருட்சமாவதை இந்நிகழ்வு உணர்த்தி, விழிப்பை ஏற்படுத்தியது.

யோ. மாலினி (திருநெல்வேலி நிருபர்)

முகவரி தொலைந்த நடைப்பிணங்களாக, அல்லலுற்று அலையும் எம்மக்களின் அழுகுரல்கள் அன்னையின் செவிகளில் ரீங்காரமிட்டதன் விளைவாக எமது கோப்பாய் மண்ணில் அன்னை திரேசா அமைதி இல்லத்தினர் காலடி வைத்தமை, எமது மண்ணிற்கு மேலும் சிறப்பைத் தந்து எம்மை ஆன்மீக வழியில் வழிநடத்துவதை நன்றியுடன் உணர்கின்றேன்.

S. G. றூபவசந்தினி (கோப்பாய் நிருபர்)



அன்னை திரேசா அமைதி இல்லத்தில் அருட்சகோதரிகளுடன் கலந்துரையாடுவதையும், பாதுகாவலன் ஆசிரியரால் மரம் நாட்டப்படுவதையும், பாதுகாவலன் பணிமனையில் அஞ்சலி நிகழ்வு இடம்பெறுவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11ம் ஆண்டு நினைவஞ்சலி

18-09-1999



**மரிய்பாக்கியம் செபஸ்தியாம்பிள்ளை**
(இளைப்பாறிய ஆசிரியை)

சீவியத்தில் நினைத்தவர்களே
மரணத்திலும் மறவாதீர்கள்

நினைவுத்திருப்பலி புனித மரியன்னை பேராலயம் 6.30 மணி.

கணவன் - பிள்ளைகள்
அருட்சகோதரிகள்
M. அசும்ரீனா (A.C)
மரியகொறற்றி (S.C.J.M)

19, டேவிட் றோட்,
யாழ்ப்பாணம்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



**Alfred Paul Edirmanasinghe**

தாயின் மடியில் 27.09.1900
இறைவன் அடியில் 17.09.1998

18.09.99 சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு (புதிய நேரம்) புனித மரியாள் ஆலயத்தில் ஆன்ம இளைப்பாற்றித் திருப்பலி நடைபெறும். அத்திருப்பலியில் பங்குபற்றி அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக பிரார்த்திக்கும்படி வேண்டிக் கொள்கிறோம்.

14, டேவிட் றோட்,
யாழ்ப்பாணம்.

இவரின் பிரிவால் துயருறும்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

**We had no chance to say good bye**
**But for Daddy We will not ery**
**But in our hearts we'll hide our pain**
**Until some day we'll meet again**

## 3ம் ஆண்டு நினைவு அஞ்சலி

மண்ணில் 02 01 1981
விண்ணில் 25 09 1996



யோ. றோஸ் இம்மனுவேல்

மூன்று ஆண்டு மூடி மறைந்தாலும்
றோஸ் உங்கள் அழகுமுகம் மறைந்திடுமோ!
மூவுலக மன்னன், அவன் முகம் காண
சென்ற உன்னை மனத்தினிலே
நினைத்து மனம் ஆறி நிற்கிறோம்

இறைவா, றோஸ் என்னும் உமது அடியாளுக்கு நித்திய வான்வீட்டில் இடம் அளித்தருள வேண்டுமென்று மன்றாடுகின்றோம்.

ஆன்ம இளைப்பாற்றிக்கான திருப்பலி 25.09.99 காலை 6.30 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும்.

மறைக்கல்வி நிலையம்
யாழ்ப்பாணம்

யோ. அன்ரன் மரியதாஸ்
(யோகன்) (குட்டி மாமா)

## 'புதிய உலகம்'

கத்தோலிக்க வானொலி நிகழ்ச்சியின் ஆயிரமாவது மலரை முன்னிட்டு நடைபெறும் கவிதை போட்டி

தலைப்பு : *புது உலகம் படைக்க புறப்பட்டு வருக!*

### விதிமுறைகள்

* 40 முதல் 60 வரிகளுக்குள் கவிதை அமைந்திருக்க வேண்டும்.
* முழுத்தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதப்பட வேண்டும்.
* கவிதை எழுதும் தாளில் அல்லாது, பெயரும் முகவரியும் வேறாக எழுதி இணைக்கப்படுதல் அவசியம்.
* அனுப்ப வேண்டிய இறுதி நாள் 1999 செப்டம்பர் 30.
* நடுவர்களால் தெரிவு செய்யப்படும் மூன்று கவிதைகளுக்கு பரிசுகள் வழங்கப்படுவதோடு அவை 'புதிய உலகம்' நிகழ்ச்சியிலும் ஒலிபரப்பாகும்.

*அனுப்பவேண்டிய முகவரி*
புதிய உலகம் ஆயிரமாவது மலர்
கவிதை போட்டி
த. பெ. எண். 44
மட்டக்களப்பு.

## சேதமடைந்த நிலையில் மண்ணித்தலை புனித செபஸ்தியார் ஆலயம்

மண்ணித்தலைப் பகுதியில் தொடர்ச்சியாக நடைபெற்ற விமான, எறிகணைத் தாக்குதல்களினால் அப்பகுதியில் அமைந்துள்ள புனித செபஸ்தியார் ஆலயம் பெரும் சேதத்திற்கு உள்ளாகி ஒரு வரலாற்றுச் சின்னமாக காட்சி அளிக்கிறது. இவ் ஆலயத்திற்குச் சொந்தமான தேரும் சேதமடைந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

இவ்வாலயம் முன்னர் ஒரு யாத்திரை ஸ்தலமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

மேலும் அருகிலுள்ள அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையும் தொடர்ந்து விமான மற்றும் எறிகணைத் தாக்குதல்களுக்கு இலக்காகி சேதமடைந்த நிலையிலுள்ளதாகவும் அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

எஸ். யேசுதாஸ்
கொழும்புத்துறை நிருபர்.

## உணர்வுச் சித்திரம் 5

### இசை

—வானம்பாடி

சிந்தனைக்கினிமை நீ செவிகளுக்கினிமை நீ
பைந்தமிழ் பாவுக்கும் நாவுக்கும் இனிமை நீ
எந்தையே உன்னைப்போல்
இனியதோர் பொருளுண்டோ
சுந்தர ரூபனே சுகுணாலயனே, என்பது
'இசை' என்ற மகுடத்தில் இன்று மாலை
நான் ஆற்றும் சொற்பொழிவின் தொடக்கம்.
இசையின் வரைவிலக்கணம், வரலாற்றுக் குறிப்புகள்
கர்நாடக சங்கீதம், பிறநாட்டு இசை, மெல்லிசை,
சினிமாப் பாடல்கள் ஆகியவை இன்று
எம்மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் தாக்கங்கள்
பற்றிய குறிப்புகளை எழுதினேன்.
திருவழிபாட்டில் இசையின் முக்கியம் பற்றி
குறித்துக் கொண்டேன்.
சிறிது நேரம் கண்ணை மூடி இரவின்
இசை கேட்க காதைத் திறந்தேன்.
காற்றின் வேகத்தில் தென்னை ஓலையின்
உராய்வு ஓசை கேட்டது
பூட்டாதுவிட்ட யன்னல் கதவின் படார் ஒலி கேட்டது
நாய்களின் சண்டைச் சத்தம் கேட்டது
பக்கத்து வீட்டு தொலைக்காட்சியின்
கதறல் கேட்டது. குழந்தையின் அழுகை கேட்டது.
இன்னும் பல ஒலிகள் கேட்டன.
அவ்வேளை "ஐயோ மாதாவே" என்று
அம்மாவின் கதறல் கேட்டது.
உடனே சென்று பார்த்தேன்
கைலாம்பு எரிந்துகொண்டிருந்தது
அம்மா குந்திக்கொண்டிருந்தார்
என்னைக் கண்டதும்,
"மகன்! என்னடா வெடிச்சத்தம்" என்று
நடுங்கும் குரலில் கேட்டார்.
"அதம்மா பக்கத்து வீட்டு ரி.வி.யில்" என்றதும்
"ஆக்கினைப்படுவார் ராவில எண்டாலும்
சத்தத்தைக் குறைச்சால் என்ன?"
என்று சத்தமாகக் கத்தினார்
"ராவில சும்மா கத்தாம, பேசாமல் படுங்கோ
விடிய இன்னும் நேரம் இருக்கு" என்றேன்
முட்டுக் குளிசையைக் குடித்துவிட்டு,
செபமாலையைக் கையில் எடுத்தார்
நான் பக்கத்து அறையை எட்டிப் பார்த்தேன்
தாயும் பிள்ளைகளும் நல்ல நித்திரை
நான் மீண்டும் எழுதத் தொடங்கினேன்.
திடீர் மின்வெட்டு. ரிவி சத்தம் நின்றது.
மகிழ்ச்சி! மேசை விளக்கைக் கொழுத்தி
சொற்பொழிவின் இறுதிப் பகுதியில்
வரம்புடைத்தால் வயல் நாசம்
**அணை உடைத்தால் அயல்வளம் நாசம்**
**இசை வரம்புடைத்தாலோ! கோபம் தலைக்கேறும்**
**மனித உணர்வு மரத்துவிடும். தூக்கமின்மையால்**
**நரம்பு மண்டலங்கள் நடுக்கம் காணும்**
**செவிப்புலன் செயலிழக்க நேரிடும்**
என்று எழுதிய போது
மின்னொளி அறையுள் வந்தது
மேசை விளக்கைத் தணித்தேன். அந்த நேரம்
முன் வீட்டு வானொலி வாயைத் திறந்து கத்தியது
"சனியன் பிடிப்பான் சத்தத்தைக் குறையடா"
என்று கத்தினார் முன்வீட்டு ஐயா
வானொலியோ வாய் கிழியக் கத்தியது
ஐயாவின் வாய், வரம்பு மீறி
வார்த்தைகளைக் கக்கியது
எழுத முடியாத மண்மொழிகள் அவை.
குயில்கள் கூவத் தொடங்கின
கோயில் மணிகள் ஒலித்தன
அப்பொழுது பின்வீட்டிலிருந்து
"தமிழால் உன் புகழ்பாடி
தேவா நான் தினம் வாழ" என்ற
பாடல் காற்றில் கலந்து என் காதில் நுழைந்தது.
எழுதுவதை நிறுத்திவிட்டு, திருப்பலிக்குச் செல்ல
ஆயத்தமானேன். அப்பொழுது அம்மாவும்
எழுந்து திருப்பலிக்குப் புறப்பட ஆயத்தமானார்
நான் விடியலின் கீதத்துடன்
திருப்பலிக்குப் புறப்பட்டேன்.

## வாசகர் கருத்து

ஆசிரியர் அவர்கட்கு, தங்களின் 125வது ஆண்டை நோக்கிய பாதுகாவலனின் ஓர் வாசக ரசிகன் நான். முன்பு வெளிவந்த பாதுகாவலனை விட இப்போது வெளிவரும் பாதுகாவலன், என் போன்ற வாசகர் வாசித்துப் பயனடையக் கூடியதாகவுள்ளது. இப்பொழுது வெளிவரும் பாதுகாவலன் மிக அழகாகவும் நல்ல கருத்துக்கள், சிந்தனைகளைக் கொண்ட ஆக்கங்களையும் தொடர் கட்டுரைகளையும் தாங்கிவருவதால் அது சமுதாயத்திற்கு பயனளிப்பது உறுதி.

சிறுவர்களுக்காக வரும் பகுதி நன்றாகவுள்ளது. இப்பகுதியை இனிவரும் பாதுகாவலனில் விளங்கக்கூடிய பெரிய எழுத்துக்களால் போடுங்கள். இப்போதுதானே உங்களுக்கு ஓவ்செற் வசதி உண்டு. ஆனபடியால் இனி நீங்கள் இப்பகுதியை பெரிய எழுத்துக்களால் போடுவீர்களென எதிர்பார்க்கும் உங்கள் பாதுகாவலன் வாசகர்.

பூ. சதிஸ்குமார்
அரியாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குகளில் பாதுகாவலன் தினம் —ஒரு கண்ணோட்டம்—

### பாசையூர்ப் பங்கில் பாதுகாவலன் தினம்

## இலங்கை மண்ணில் இறைவிசுவாசத்தையும் பிறர் அன்பையும் உண்மையையும் எடுத்தியம்பும் அரிய செய்தி ஊடகமாக அரும்பணியாற்றுகிறது


~அருள்திரு எட்வின் வசந்தராஜா

பாசையூர்ப் பங்கில் உள்ள புனித அந்தோனியார், வளன்புரம் புனித வளனார், கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயங்களில், அன்றையதினத் திருப்பலியில் முன்னுரை, மன்றாட்டு, மறையுரைகளில் பாதுகாவலன் தினத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து வழிபாடுகள் நடைபெற்றன.

கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்தில் திருப்பலிப் பீடத்தின் பின்னணி, கடந்த காலங்களில் வெளிவந்த பாதுகாவலன் பத்திரிகைகளின் முன்பக்கங்களைக் கொண்டு அலங்கரிக்கப் பட்டிருந்தது. அதில் பாதுகாவலன் தினம், வீட்டுக்கொரு பாதுகாவலன் விசுவாசத்தின் பாதுகாவலன் போன்ற வாசக அட்டைகள் பொருத்தப்பட்டு சிறப்புறக் கொண்டாடப்பட்டது.

திருப்பலி நிறைவேற்றிய அருட்திரு எட்வின் வசந்தராஜா அடிகள், "கடந்த 120 ஆண்டுகளுக்கு மேலாக வெளிவந்து கொண்டிருக்கும் இப் பத்திரிகை இலங்கை மண்ணில் இறைவிசுவாசத்தையும், பிறர் அன்பையும் உண்மையையும் எடுத்தியம்பும் அரிய செய்தி ஊடகமாக அரும்பணியாற்று கிறது. இதன் வளர்ச்சிக்குப் பக்கபலமாகக் கைகொடுக்க வேண்டியது ஒவ்வொருவரதும் கடமையாகும். இதன் ஆசிரியர், பணியாளர்கள், எழுத் தாளர்கள், நிருபர்களுக்காக இறைவனிடம் செபிப்போம்" என்று தெரிவித்தார்.

எஸ். யேசுதாஸ் (கொழும்புத்துறை நிருபர்)




பாதுகாவலன் தினத்தையொட்டி கொழும்புத்துறை புனித செபமாலை மாதா ஆலயத்தின் பீடப் பின்னணியில் அமைக்கப்பட்டிருந்த கடந்த கால பத்திரிகைகளாலான பதாகைகளைப் படத்தில் காணலாம்.

### மானிப்பாய் பங்கில்

## திருச்சபையின் கலாசாரம் விழுதுவிட வைத்தவன் பாதுகாவலன்

22-8-99இல் மல்வம் திருக்குடும்ப ஆலயத்தில் நடைபெற்ற திருப்பலி வேளையில் முன்னுரை மூலம் பாதுகாவலன் விழாவை நினைவுறுத்தியும், மன்றாட்டில் அவன் வளரவும், மக்கள் கரங்களில் தவழ்ந்து மழலை பேசவும் வேண்டப்பட்டது.

முன்னுரையில் : நற்செய்தியைப் பரப்பும், மறை அறிவிக்கும் பாதுகாவலன் பாராட்டுக்குரியவன். ஏனெனில் இன்றைய இளைய தலைமுறையின் தேடலானது உலக கலாசாரங்கள், சாக்கடைப் பத்திரிகைகள் மூலம் அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்கிறது. ஆனால் திருச்சபையின் கலாசாரத்தையும், இறைவனின் ஆழமான நட்புறவையும், ஆக்கத்திறனையும் ஆக்கும் அன்புச் சக்தியாக செய்திப் பரிமாற்றத்திலும், அறிவியற் துறையிலும், இறைமறை உறவிலும் நிலைத்து நிற்கும் பாதுகாவலனுக்கு பாராட்டும், அத்துடன் நாம் அளிக்கும் ஆதரவும் வேண்டப்படுகிறது. எனத் தெரிவிக்கப்பட்டது.

மன்றாட்டுக்களில் : வீட்டுக்கொரு பாதுகாவலன் வாங்கி, அவன் வளர வாய்ப்பளிக்க வேண்டுமென்று இறைவன் மூலமாக (மக்களிடம்) வேண்டப் பட்டது.

இத் திருப்பலியை பங்குத்தந்தை அருட்திரு ச. இயூஜின் பிரான்சிஸ் அடிகள் நிறைவேற்றினார்.

பாதுகாவலன் விநியோகஸ்தர்களாக செல்வி. பிறீமா செல்வராசாவும், செல்வி. றெயிலின்சியா அருமைநாயகமும் நியமிக்கப்பட்டார்கள்.

வ. பத்திநாதன், நிருபர்

### தாளையடிப் பங்கில்

## வலயங்கள் தோறும் வாசகர் வட்டம் அமைக்கப்பட வேண்டும்

~அருள்திரு யோ. பிரான்சிஸ்

தாளையடி புனித அந்தோனியார் ஆலயத்தில் பாதுகாவலன் தினமானது 22-08-99 ஞாயிறு திருப்பலியில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அன்றைய முன்னுரையானது "எதை விதைக்கிறீர்களோ அதையே அறுவடை செய்வீர்கள்" என்ற நற்செய்தி அறிவுடன், வீட்டுக்கொரு பாதுகாவலன் விசுவாசத்தின் பாதுகாவலன் என்ற உணர்வு ஊட்டப்பட்டதாக அமைந்தது. வீட்டுக்கொரு பாதுகாவலன், இதழ் மலர்ந்து இல்லங்களில் உள்ள அனைவருக்கும் மணம் பரப்பிடும் பொருட்டு மலர்கள் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்டன.

விசுவாசத்தின் பாதுகாவலன் என வர்ணிக்கப்படும் இவ்விதழானது இருள் படர்ந்திருக்கும் எம் உள்ளங்களுக்கு ஒளியேற்றவும், எல்லோருக்கும் கிறிஸ்துவின் ஒளியைப் பரப்பிடவும் வேண்டு மென தீபம் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

மேலும் பாதுகாவலன் இதழானது தொடர்ந்தும் நல்ல சிந்தனைகளை வாசகர்களுக்கு ஊட்டி, வாசிக்கும் ஆர்வத்தை வாசகர்களிடையே தூண்டிவிடவும், இதனால் வாசகர்களின் தொகை அதிகரித்திடவும் வேண்டி தூபம் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

பங்குத்தந்தை அருள்திரு யோ. பிரான்சிஸ் அடிகளார் பாது காவலனின் வளர்ச்சி பற்றியும், அதன் தொண்டர்களது அரும் பெரும் பணி பற்றியும் சிறப்பாக எடுத்துரைத்தார். வலயங்கள் தோறும் வாசகர் வட்டங்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தினார்.

ஈற்றில் திருப்பலி முடிந்ததும் வலயங்கள் தோறும் வாசகர் வட்டம் அமைக்கப்பட்டு, வலயங்களின் கல்விப் பகுதிப் பொறுப்பை ஏற்றனர்.

க. மரியநாயகம் (தாளையடி நிருபர்)

### நாவாந்துறையில்

## பல இன்னல்கள் மத்தியிலும் எம்மை மறைஅறிவில் வளர்க்கும் சிறந்த பத்திரிகை பாதுகாவலன்

-அருட்திரு பீற்றர் துரைரட்ணம்

"பல இன்னல்கள் மத்தியிலும் எம்மை மறைஅறிவில் வளர்க்கும் சிறந்த பத்திரிகை பாதுகாவலன். அதை வாங்கிப் படித்து எமது ஆதரவை நல்குவோம்". இவ்வாறு நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயத்தில் நடைபெற்ற பாதுகாவலன் தினவிழாவில் பங்குத்தந்தை அருட்திரு பீற்றர் துரைரட்ணம் மறையுரையாற்றினார்.

அன்றைய பாதுகாவலன் தின விழா ஞாயிறு திருப்பலியை நாவாந்துறை கத்தோலிக்க இளையோர் ஒன்றியம் சிறப்பாக நடாத்தியது. அவர்கள் வீட்டுக்கொரு பாதுகாவலன் மூலம் எம் எதிர்கால சந்ததிகளாகிய சிறுவர்களையும், இளைஞர்களையும் வாசிப்பில் ஊக்கப்படுத்தி, மறைஅறிவில் வளர்க்க பெற்றோராகிய நாம் முயற்சியெடுப்போம் என திருப்பலியில் சுலோக அட்டை மூலம் தெரியப்படுத்தி, அன்றைய திருப்பலியில் பாதுகாவலன் மூலம் நாம் பெற்ற பயன்களுக்கு நன்றி கூறியும், பாதுகாவலன் மீண்டும் நல் மலர்ச்சி பெற்று எம் கிறிஸ்தவ வாழ்வை மேலும் வளப்படுத்தும் ஓர் காவலனாக விளங்கிடவும், நாம் அனைவரும் அதனை வாசித்து பயன் பெறவும், பயன்படுத்துவோர் அதிகரிக்கவும் திருப்பலியில் செபிக்கப்பட்டது.

இவ்வேளையில் நாவாய் கத்தோலிக்க இளையோர் ஒன்றியம் மேலும் விற்பனையை அதிகரிக்க ஆதரவு நல்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

லூ. மேசி (நாவாந்துறை)

## வீட்டுக்கொரு பாதுகாவலன் வாங்கிப் படியுங்கள்

–அருள்திரு றொபின்சன் யோசவ்

22-08-99இல் மானிப்பாய் அன்னாள் ஆலயத்தில் நிறைவேற்றப்பட்ட திருப்பலியின் மறையுரையில், அருள்திரு றொபின்சன் யோசவ் அடிகள் "125ஆம் ஆண்டை நோக்கி வீறுநடைபோடும் பாதுகாவலன் கத்தோலிக்க மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். எமது மூதாதையர் தலைமுறை தலைமுறையாக கத்தோலிக்க மக்களுக்கு பாதுகாவலன் மூலம் ஆற்றி வந்த பணியை இன்று நினைவுகூருகிறோம்.

எனவே கிறிஸ்துவையும், கிறிஸ்தவ விழுமியங்களையும், திருச்சபை யின் செய்திகளையும் அறிந்துகொள்ள, சிறுவர், இளையோர், பெரியோர் அனைவரும் உங்கள் பங்கில் பாதுகாவலனைப் பெற பதிவு செய்யுங்கள். வாங்குங்கள், படியுங்கள், பயன் பெறுங்கள்" என்று கூறினார்.

வ. பத்திநாதன், நிருபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய மிலேனியத்தை அண்மிக்கும் வேளையில் கிறிஸ்துவுக்கு உள்ளங்களைத் திறந்துவிடுங்கள்

## உலக இளைஞர் தினத்தையொட்டி திருத்தந்தையின் செய்தி

"புதிய மிலேனியத்தை அண்மித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் கிறிஸ்துவுக்கு உங்கள் உள்ளங்களைத் திறந்துவிடுமாறு உங்களை மீண்டும் கேட்டுக் கொள்ளுகிறேன். கிறிஸ்து தம்மை ஏற்றுக்கொண்டவர்களுக்கு இறைமக்களாகும் பேற்றைக் கொடுத்தார்" என திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் அடுத்துவரும் உலக இளைஞர் தினத்திற்கான தமது செய்தியில் கூறியுள்ளார். 2000ம் ஆண்டு ஆகஸ்ட் 15 முதல் 19வரை உரோமாபுரியில் உலக இளைஞர் தினம் நடைபெறவிருக்கிறது.

"வார்த்தை மனுவுருவானார், நம்மிடையே குடிகொண்டார்" எனப் புனித அருளப்பர் கூறும் ஆழ்ந்த மறைபொருளே இத்தினத்தின் கருப்பொருளாகும்.

திருத்தந்தை தொடர்ந்து தமது செய்தியில், "இறைவன் நாம் அனைவரும் தமக்குச் சொந்தமானவர்களாக, புனிதர்களாக இருக்கவேண்டுமென்று விரும்புகிறார். மனித சக்தியில் தங்கியிருந்தால் இது சாத்தியமாகாது. திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவருக்கும் இறைவன் வகுத்த திட்டமாகிய புனிதத்துவம் கிறிஸ்துவுடன் இருந்தால் சாத்தியமாகும்.

புதிய மிலேனியத்தின் புனிதர்களாக இருக்க அஞ்ச வேண்டாம். தியானமும் செபப்பற்றும் உடையவர்ாய் இருங்கள். விசுவாசத்தில் இசைவு உள்ளவர்களாகவும், சகோதரர்களின் சேவையில் ஈடுபாடுடையவர்களாகவும் இருங்கள். திருச்சபையின் செயலாற்றலுள்ள உறுப்பினராகவும் விளங்குங்கள். இறைவார்த்தையைச் செவிமடுத்து அருட்சாதனங்களிலிருந்து ஊட்டம் பெறுங்கள். துணிவுள்ள நற்செய்தித் தூதுவர்களாகவும் புதிய மனுக்குலத்தைக் கட்டி எழுப்புபவர்களாகவும் நீங்கள் விளங்க வேண்டுமென்பதே இறைவனின் விருப்பம்".

## மண்டைதீவு திருவிழா

மண்டைதீவு சம்பேதுருவானவர் திருவிழா 9 வருடங்களின் பின் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மண்டைதீவு சம்பேதுருவானவர் ஆலயப்பிரதேசம் அதியுயர் பாதுகாப்பு வலயமாக இருப்பதனால் அங்குள்ள கத்தோலிக்க குடும்பத்தினர் தெற்குப்பகுதியிலேயே வசிக்கின்றனர். அவ்விடத்தில் கடற்கரையில் அவர்கள் அமைத்துள்ள கொட்டிலிலேயே மேற்படி திருவிழா கொண்டாடப்பட்டது.

மண்டைதீவு முன்னாள் பங்குத்தந்தையும் பாதுகாவலன் ஆசிரியருமான அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை அவர்கள் திருநாள் திருப்பலியை நிறைவேற்றினார். மறையுரையில், மண்டைதீவு மக்கள்தான் முதன்முதல் இடம்பெயரத் தொடங்கியவர்கள். அவர்கள் இன்று பல இடங்களில் இடம்பெயர்ந்து உள்ளார்கள். அவர்கள் அனைவரும் மண்டைதீவிற்குவந்து வாழும்நிலை ஏற்பட நாம் செபிக்கவேண்டும் என்றார். பங்குத்தந்தை சார்பாக அருட்திரு சனிஸ்ரன் இணைந்து திருப்பலி ஒப்புக் கொடுத்து அனைவருக்கும் நன்றி கூறினார்.

நி. அன்ரனி

**ST. PATRICK'S COLLEGE, JAFFNA**

### அனுமதி விண்ணப்பம் – 2000

விண்ணப்பப் பத்திரம் (பரீட்சைக் கட்டணம் உட்பட) ரூபா.200/=. 06.09.1999 தொடக்கம் 24.09.1999வரை பாடசாலை நாட்களில் முற்பகல் 9.30 மணியிலிருந்து பிற்பகல் 1.30வரை கல்லூரியின் பிரதான அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 24.09.1999ஆம் திகதிக்குமுன் கல்லூரியின் பிரதான அலுவலகத்தில் முற்பகல் 9.30 மணிக்கும் பிற்பகல் 12.30 மணிக்குமிடையில் நேரில் கொண்டுவந்து ஒப்படைக்கவும்.

1ம் தரத்துக்கு அனுமதிகோரும் பிள்ளைகள் 01.02.1994க்கும் 31.01.95க்குமிடையில் (இரு தினங்களும் உட்பட) பிறந்திருக்க வேண்டும்.

அனுமதிப் பரீட்சை 02.10.1999 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.

சமூகம் தரவேண்டிய நேரம் காலை 8.30
பரீட்சை ஆரம்ப நேரம் காலை 9.00

6ம், 9ம் ஆண்டுக்கான அனுமதிப்பரீட்சையில் 85% திறமை காண்பிக்கும் முதல் 10% மாணவர்களுக்கு வழமைபோல் ஆயரது புலமைப் பரிசில் வழங்கப்படும்.

தபால் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்களும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் வரும் விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

சித்தியெய்திய தூரஇடத்து மாணவர்களுக்கு விடுதிவசதி வழங்கப்படும்.

கல்லூரி அதிபர்

# கறிற்றாஸ் ஆசியப் பிராந்தியத் தலைவராக கண்டி ஆயர் தெரிவு

ஆசிய மக்களின் நன்மை கருதி சர்வதேச கரிற்றாஸ் அமைப்பின் ஆசியாவிற்கான செயலகப் பிரிவொன்று அண்மையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. "கரிற்றாஸ் ஆசியா" அங்கத்தினரின் ஒன்றுகூடலின் போது கண்டி மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு வியான்னி பெர்னாண்டோ அவர்கள் அதன் தலைவராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

இப்புதிய அமைப்பு, கரிற்றாஸ் அமைப்பின் பணிகளை விரிவுபடுத்த பல நாடுகளும் பயனடையக்கூடிய விதத்திலே திட்டங்கள் வகுக்கத் துணைபுரியுமென எதிர்பார்க்கப்படுகிறது. பிராந்திய திட்டமிடலிலும், திருச்சபையின் பணிகளில் பொதுநிலையினரது பங்களிப்பை அதிகரிக்கவும் முன்னுரிமை அளிக்கப்படுமென ஆயர் வியான்னி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

**அரசியல்வாதிகள் . . .** (1ம் பக்கத் தொடர்ச்சி)

"எமது நாட்டின் அரசியல்வாதிகள் இனப்பிரச்சனையைத் தீர்ப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. நாட்டுக்காகத் தியாகம் செய்ய அவர்கள் தயாராக இல்லை. அரசியல் இலாபமும், பொருளாதார இலாபமுமே அவர்கள் நோக்கம். எனவே நாட்டு மக்களும், ஏனைய நாடுகளும்தான் இலங்கையில் சமாதானத்தைக் கொண்டுவர முதலில் முயற்சிகளை ஆரம்பிக்கவேண்டும்" என்று அவர் தெரிவித்தார்.

"யுத்தத்தில் பொதுமக்களின் பிள்ளைகளே செத்து மடிகிறார்கள். யுத்தம் தொடர்கிறது, அதனை நிறுத்த புதியதொரு வழியை மக்கள் தெரிவு செய்யவேண்டும்.

இரத்தக் கறைபடிந்த ஆயுதங்களுடன் புதிய நூற்றாண்டில் பிரவேசித்தலாகாது. சமாதானத்தைக் காண முயலவேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார்.

**'புதிய உலகம்'. . .** (1ம் பக்கத் தொடர்ச்சி)

கரவையூர்ச் செல்வம் அவர்கள் உயர் கல்விக்காகவும் மற்றைய பொறுப்புக்களாலும் 'புதிய உலகம்' கத்தோலிக்க வானொலி நிகழ்ச்சிகளிலிருந்து ஒதுங்கிக் கொண்டது முதல் மலர்வேந்தன் இந்நிகழ்ச்சிகளை தொடர்ந்தும் தயாரித்து சிறப்பாக ஒலிபரப்பி வருகிறார்.

1983ம் ஆண்டு இனக்கலவரத்தின் பின் பல்வேறு காரணங்களை முன்னிட்டு மட்டக்களப்பிலிருந்து 'புதிய உலகம்' தயாரிக்கப்படுகிறது. ஆயினும் மற்றைய மாவட்ட கலைஞர்களும் பங்குகொள்ள வாய்ப்பளிக்கப்படுகிறது. செப்ரெம்பர் 17ம் திகதி ஒலிபரப்பாகும் 1000வது மலரை முன்னிட்டு, புதிய உலகம் படைக்க புறப்பட்டு வருக என்னும் தலைப்பில் கவிதைப் போட்டி ஒன்றும் நடாத்தப்படவிருக்கிறது.

**பாதுகாவலன் . . .** (1ம் பக்கத் தொடர்ச்சி)

அன்னையின் உருவப்படத்திற்கு விளக்கேற்றிய பின், இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. திரு. யோசப் பாலா அன்னையின் வாழ்வும் வழியும் பற்றிய தொடக்கவுரையை நிகழ்த்தியபின்னர், பாதுகாவலன் ஆசிரியர் அன்னையின் பணியை ஆய்வுசெய்து உரையாற்றினார். திரு. அபீர் ராஜன் "மனிதம் இன்னும் வாழ்கிறது" என்ற கவிதை நிகழ்வை ஆற்றினார்.

**சேவைக்கென்றே பிறந்த**
**வெளிநாட்டு வெள்ளை றோஜா**
**இந்திய மண்ணில் மணம் பரப்பியது**
**அல்பேனியநாட்டு அருட்கன்னி மலரொன்று**
**இந்தியமண்ணை இரக்கமுடன் நேசித்தது.**

என்று கவிதையின் சாரம் அமைந்தது.

அஞ்சலி நிகழ்வை தொடர்ந்து அன்னை திரேசா சபையினரின் அமைதி இல்லத்தை நோக்கி கோப்பாய்க்கு அனைவரும் சென்று சபையினருக்கு அனுதாபத்தை தெரிவித்தனர். ஏழைகளுக்காக தம் வாழ்வை தியாகம் செய்த அன்னையின் நினைவுநாளில் அன்னையின் சேவையை நினைத்து வறிய மக்களுக்கு அத்தியாவசிய உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வை முன்னின்று நடத்திய திருநெல்வேலி பங்குத்தந்தை பிரான்சிஸ் டானியல் அவர்கள் இங்குள்ள அருட்சகோதரிகள் தங்களால் இயன்றதை ஏழை மக்களோடு பகிர்ந்து கொள்கிறார்கள். பணவளமும் தாராளமனமும் கொண்ட அனைவரும் இவர்களுக்கு அன்புக்கரம் நீட்டி உதவிசெய்ய வேண்டும் என்று தெரிவித்தார். இறுதியில் அன்னையின் நினைவாக பாதுகாவலன் ஆசிரியர், நிருபர்களினால் மரம் நாட்டு வைபவம் இடம்பெற்றது. யாழ் மறைமாவட்டத்திலிருந்து அன்னையின் சபையில் இணைந்து கொள்ள இருவர் ஏற்கனவே முன்வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ரூபவசந்தினி (கோப்பாய் நிருபர்)

# யாகப்பர் ஆலயத்தின் திருநாள் நிகழ்வுகள்

குருநகர் வாழ் மக்களின் பாதுகாவலராம் புனித யாகப்பர் ஆலயத் திருவிழா யூலை 25ம் திகதி யாழ் ஆயர் பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களின் தலைமையில் நிறைவேற்றப்பட்டது.

ஆயர் தமது மறையுரையில், "ஒருநாள் செபதேயுவின் மனைவி இயேசுவிடம் வந்து, அவர் தமது அரசில் ஆட்சி செய்யும்போது தனது மக்களாகிய யாகப்பரையும் அருளப்பரையும் தமது இடப்பக்கத்திலும் வலப்பக்கத்திலும் அமரச்செய்யும்படியாக கேட்டுக்கொண்டாள். அவள் தனது பிள்ளைகளுக்கு அழிவுக்குரிய இவ்வுலக செல்வங்களை கேட்கவில்லை. இன்று நாம் இயேசுவிடம் கேட்பது இவ்வுலக செல்வங்களையா? அல்லது நானும் உம் இராச்சியத்தில் அமர வரம் தாரும் என்பதையா?" என்று கூறி, பிறர் சிநேகத்துடன் செபிக்கவேண்டுமென்பதை ஒரு கதை மூலம் விளக்கினார்.

திருநாள் திருப்பலியின் பின் திருச்சுரூபப் பவனி இடம்பெற்றது. அதைத் தொடர்ந்து பங்குத்தந்தையால் பாதுகாவலரிடம் வேண்டுதல் செபம் வாசிக்கப்பட்ட போது மக்கள் கண்களில் கண்ணீர் கசிய, தமது உள்ளத்தின் ஏக்கங்கள், தாக்கங்கள் அனைத்தையும் வெளிப்படுத்தினர்.

தகவல்: டெ. சே. சுவைனஸ், திருமதி. யூஜின் மூலியஸ்

# அன்புத் தாயார் அன்னை தெரேசா

சரிதமெலாம் பொன்னெழுத்திற் பொறித்து வைத்தே
சத்தியத்தின் மணிமுடிமேற் பதிந்த முத்து
எரிமலையின் அலைபெருகி நெஞ்சம் வேக
இருட்கடலில் மிதந்தவரைக் கரைமேற் சேர்க்க
உருகியதேன் மெழுகானார்தெரேசா அன்னை
ஒளிபொழிந்த அவருருவம் உலகம் எல்லாம்
வருகின்ற தலைமுறைக்கோர் வரலா றாகும்
வாழ்விதுதான் எனும்வாக்கை வரைந்து சென்றார்

அலைபுரளும் கடலெனவே அமைதி குன்றி
ஆதரவே அனுவுமிலா வறியோர் மக்கள்
நிலைதளர நெஞ்சத்தாற் பாலை வார்த்தே
நிர்மலனார் சிலுவைதனை இருகை ஏந்தி
மலைமலையாய் அருளறத்தின் மாட வீடு
மணங்கனிந்து கட்டிவைத்த மாட்சி இந்த
உலகமழிந் தொழிந்தாலும் அழியா துண்மை
உயர்வானக் கதிர்மூடத் திரைதான் உண்டோ?

விருந்தெனவே உடலமது காலத் தீயில்
வெந்தழிந்தே மறைந்தாலும் அன்பின் சாவா
மருந்துதனை மாநிலத்தோர் சாகா வாறே
மனங்கனிந்து சொரிந்தசெயல் மறப்போமோ நாம்?
அருந்தவமே ஒரு வடிவம் எடுத்தாற் போன்றே
அமலபரன் திருவடியின் சுவடு போந்து
கரும்பெனவே சாறுகுத்துச் சக்கை யானார்
கண்ணெதிரே விண்ணகத்தைக் காண வைத்தார்.

உருக்குலைந்த தொழுநோயார் உடலி னுள்ளே
உயிரோட உணர்வாட இரச வாத
மருத்துவத்தின் மந்திரத்தைக் கற்றி ருந்தார்
மறைவாகக் கருச்சிதைவா அந்தோ வேண்டாம்
இருந்திடுவீர் என்மடிமேல் என்றே தாங்கி
இரவுபகல் கண்ணயரா தேந்திக் காத்துச்
சிரித்தமுகச் செழுங்கமலப் பூவாய்த் தேவ
சித்தத்தின் அர்த்தமெலாம் செயலாய்த் தந்தார்.

யாழ் ஜெயம்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், பிரதானவீதி 360 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் ஒவ்செற் முறையில் 1999ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது P 197

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org